258

Regd. No. M:.2210 வருஷ சந்தா ரூ 1 8 0

ஆசிரியர்:—வை. மு. கோதை நாயகி அம்மாள்

# JEGAN MOHINI

# ஜகன்மோகினி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 14 JUL 1927

மலர் IV June 1927 இதழ் 7



தனிப்பிரதி அணா 3.

ஜகன்மோகினி ஆபீஸ்,
26 தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு.—ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

# "5 ரூபாய்கள் இனும்"

## (ஜகன்மோகினி பரிசு, நெ. 2)

மண்ணிலே நான் பிறந்தேன் மறைவிருந்தேன்
மதியிலா னெனைக் கண்டான் வாழக்கைப்பட்டேன்
எண்ணிலா உதைபட்டே னடியும் பட்டேன்
இரக்கமில்லா னென்தேக மெரியச் சுட்டான்
பின்னு மென்னை ஓடாது கட்டிவைத்தான்
பெண்கள் பலர் வந்தென்னைக் குட்டினார்கள்
பொன்னுளார் எனைமீட்டு அகத்திருத்தி
பொசிப்புடன் பாலனம் பலதும் புகட்டினரே!

விடுகதைகளுக்கு விடை யெழுதுவோர் தெளிவாக இங்கியில் எழுதி யனுப்பவேண்டும். ஒவ்வொரு விடை காகிதத்தின்கீழ் எழுதியவரின் கை யொப்பமிட்டிருந்தாலன்றிப் போட்டியில் சேர்க்கமுடியாது. குறிப்பிட்ட தேதியில் விடுவிப்பைப் பரிசோதிக்கும்பொழுது முதலில் பார்க்கப்படுகிற சரியான விடுவிப்பை எழுதியவருக்கு ஐந்து ரூபாய்கள் பரிசு கொடுக்கப் படும். மற்றும் இது சம்பந்தமாய் யாதொரு கடிதப் போக்கு வரத்தும் வைத் துக்கொள்ள முடியாது. விடுகதைப் பரிசோதகரின் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி செல்லக்கூடியதுமாகும்.

விடை காகிதமும் அதனுடன் "ஒரு அணு" போஸ்டல் ஸ்டாம்பும் அடக்கம் செய்து 20-7-1927க்குள் சேரும்படி, டாக்டர் கே.எஸ். பீ. மணியம் அவர்கள், (விடுகவி டிபார்ட்மெண்ட்) நரசை, கீர்தனமங்கலம் போஸ்டு, சிக்கில், எஸ். ஐ. ஆர்., என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

1-வது பரிசுக்கு விடையனுப்பிய நேயர்கள் இரண்டணு ஸ்டாம்பு அனுப்பியிருத்தலால் இவ்விரண்டாம் பரிசுக்கு அன்னோர்கள் ஸ்டாம்பு அனுப்ப வேண்டுவதில்லை, சரியான விடுவிடுப்பும், பரிசு பெற்றவரின் பெய ரும், இச்சஞ்சிகையின் வாயிலாகவே அறிவிக்கப்படும்.

பரிசோதனை நாள்—20-7-1927.

**நரசை, டாக்டர், கே. எஸ். பீ. மணியம்,**
பரிசளிப்பவர்.

**நாகை, மிஸ். ஆனந்ததமயந்திபாய்,**
பரிசோதகர்.

---

# சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு

நமக்கு எழுதும் கடிதங்களில் சந்தா நம்பரை மறக்காமல் தெரி விக்கவேண்டும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் நமக்குப் புது விலாசத்தை 25 தேதிக்குள் தெரிவிக்காவிடில் அவர்களது பழைய விலாசத்திற்கே சஞ்சிகை அனுப்பப்படும். இதனுல் ஏற்படும் தவறுதலுக்கு நாம் பொறுப்பாளியல்ல.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1927
MADRAS

## 9-வது அதிகாரம்

### பழியோரிடத்தில் பண்டமோரிடத்தில்.

காந்தாமணி செல்லப்பாவைக் கடற்கரையில் சந்தித்தபோது, அவளுடைய சிநேகிதைகள் அவ்விடத்தில் தோன்றியதும் எல்லோரும் கொஞ்சதூரம் கால் நடையாகச் சென்று, பிறகு தம் தம் இல்லம்போய்ச் சேர்ந்தார்கள். காந்தாமணி தன் வீட்டை அடைந்ததும் வழக்கம்போல் தனது பிதாவுடன் உட்கார்ந்து பத்திரிகை படித்துவிட்டுப் பின் போஜனம் செய்து தன்னுடைய அறைக்கு வந்து சேர்ந்தாள். அவளுடைய மனம் அன்று மாலை செல்லப்பா பேசியதையும் அங்கு நடந்த வரலாறுகளையும்பற்றியே எண்ணி வருந்தியது. அதனால் அடிக்கடி அவள் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். அவள் மனத்தில் இன்னதென்று விவரித்துச் சொல்வதற்கியலாத விதமான ஏதோ ஒரு மாதிரியான அவஸ்தை உண்டாய் அவளை வருத்தியது. அவளுடைய நிலைமை இன்று முற்றும் மாறியே இருந்தது. அதனால் அவள் அறைக்கு வந்த சற்றுநேரத்திற்கெல்லாம் ஒரு ஸோபாவில் சாய்ந்துவிட்டாள். பின்பு அவள் பிரமை பிடித்தவள்போலானாள். ஆனால் அவளுக்குப் பெருமூச்சு அடிக்கடி வந்துகொண்டே இருந்தது. "ஆகா! என்ன உலகம்! என்ன மனித வாழ்க்கை! குற்றம் செய்வதையும் செய்துவிட்டு, 'கடவுளின்மீது ஆணையாகச் செய்யவில்லை' என்று அதை மறுக்கிறானே! அவன் செய்யும் ஜாலங்களையும், சொல்லும் மொழிகளையும் கவனித்தால் அவை எத்தகைய உறுதியுள்ளவர்களையும் மயங்கச் செய்துவிடும்போலிருக்கின்றனவே! சிச்சீ! உண்மை இன்னதென்பதைக் கடவுள் ஒருவர் அறிவாரேயன்றி மனிதரால் எவ்வாறறியக்கூடும்? கையுமெய்யுமான கள்ளனாக இருந்தும் கல்லும் கரையும்படி வார்த்தை பேசுகிறான். சந்திரவதனா வீட்டில் நடந்த விஷயத்தை அங்கேயே கையு மெய்யுமாகக் கண்டுவிட்டார்கள். அது கொஞ்சமும் பொய்யாகாது. அந்த விஷயத்திற்கூடத்தான் நிரம்பவும் நியாயமாகநடந்துகொண்டதாகவும் அவள் தன்னை துராக்ருதம் செய்ய யத்தனித்ததாகவும் சொல்லுகின்

ருனும். இப்படியும் ஒருமனிதனிருப்பானு! சீச்சீ! அவனையேன் நான் நினைக்கவேண்டும்? அந்த நினைவு என் மனத்தில் ஏன் மாலை முதல் போராடவேண்டும்''......என்று எண்ணமிட்ட வண்ணமிருக்கையில் அந்த அறைக்கதவைத் திறந்துகொண்டு அவளுடைய தந்தை அங்கு பிரவேசித்து காந்தாவைப் பார்த்து "காந்தாமணி! என்ன யோசிக்கின்ருய்? ஏன் உன் முகம் வாடியிருக்கிறது?" என்று கூறிக்கொண்டே அவள் பக்கலில் உட்கார்ந்தார்.

தன் தந்தை வந்ததைக் கண்ட காந்தாமணி தன்னையொருவாறு தேற்றிக்கொண்டு "வாருங்களப்பா! தலைவலியாக விருக்கிறது. அதனுல் முகம் மாறுத லடைந்திருக்கும். வேறொன்றுமில்லையே!" என்ருள்.

இதைக் கேட்ட தந்தை "காந்தா! என்னிடம் ஏனம்மா வார்த்தையை மறைக்கவேண்டும்? உனக்கு இன்னும் மனம் நிம்மதி யடையவில்லை என்பதை நானறிவேன். இன்று நீ கடற்கரைக்குச் சென்றிருந்தபோது அந்தத் திருடனைக் கண்டாயாமே. அவனேடு வெகு நேரம் நின்று பேசிக்கொண்டிருந்தாயாமே. அந்தத் திருடனுடன் பேசுவதற்கு உன் மனம் சம்மதித்ததா? நீ ஏன் அவனைச் சந்தித்தாய், காந்தா! தினமிருப்பதைப் போலல்லாமல் உனது முகம் முற்றும் மாறுதலடைந் திருக்கின்றது. அவன் என்ன சொன்னுன்? நடந்த விஷயம் யாது? அதனைத் தெரிவி. என்ன கருத்தை வைத்துக்கொண்டு அவன் உன்னைத் தனித்தவிடத்தில் வந்து தைரியமாக சந்தித்திருக்கிருனே தெரியவில்லையே! அவன் பக்காத் திருடனுக வல்லவா இருக்கிருன்! அவன் உன்னைத் தனித்து சந்தித்திருக்கும் கருத்தையறியாமல் அவனுடன் நீ பேசலாகுமா? அவன் கொலை செய்யவும் அஞ்சாத பாவியாயிற்றே! அவனுக்கு நீ உதவி புரிய வரவில்லை என்ற ஆத்திரத்தினுல் உன்னை அவன் அந்தக் கடலிலேயே தூக்கி எறிந்து விட்டாலும் விடுவானே! அல்லது கழுத்தை வெட்டிப் புதைத்தாலும் புதைப்பானே! அத்தகைய கொலைகாரனுடன் நீ பேசியதே என் மனதிற்குப் பிடிக்கவில்லை. நான் உனக்கு முன்னுல் கடிதம் வந்தபோதே அவன் சகவாசம் வேண்டாம் என்று தெரிவித்தேன். நீஅப்போதுஎன்பேச்சைக் கேட்காமலிருந்துவிட்டாய்! மீண்டும் அவ

182836

னுடைய திருட்டை நாம் நேரில் கண்ட பின்னரும் நீ அவனிடம் பழைய அன்பை மறக்காமலிருப்பது நம்முடைய கௌரவத்திற்கும் யோக்யதைக்கும் அழகாகுமா! எல்லாமறிந்த நீ அவனை முக மெடுத்தும் பார்க்கலாகுமா?" என்று அவர் பேசிக்கொண்டே வரு கையில் காந்தாமணி பேசத்தொடங்கி, "அப்பா! நானவனைச் சந் திப்போமென்று கனவிலும் நினைக்கவில்லை. வழக்கம்போல் நான் இன்று கடற்கரைக்குச் சென்றவிடத்தில் அவன் திடீரென்று எதிர்பாராவிதமாக என்னெதிரில் தோன்றித்தானே பேசினன்; தான் ஒரு குற்றமுமறியாத நிரபராதி என்றும், தன்னை நான் முன் போலவே நேசிக்க வேண்டுமென்றும், தன்மீது வந்துள்ள அபாண் டம் வீணனது என்றும் கூறினன். அதற்கெல்லாம் நான் பதிலே சொல்லவில்லை. அதற்குள் எனது சிநேகிதைகள் அங்கு வந்து சேர்ந்தார்கள். நான் அவர்களோடு வந்துவிட்டேன். இதுதான் அங்கு நடந்த வரலாறு. நானும் எனது சிநேகிதைகளும் அவனை ஏளனமாகப் பேசிக்கொண்டே வந்துவிட்டோம். நான் அவனுக்கு எவ்விதமான உதவியும் புரியமாட்டேன், நேசிக்கவுமாட்டேன் என்பதை மாத்திரம் கூறிவிட்டு வந்துவிட்டேன். மற்றபடி நான் அவனுடன் எதுவும் பேசவே இல்லை" என்றாள்.

முதலியார் "உனது முகமென்னவோ முற்றும் வேறுபட்டிருக் கின்றது. ஆகையால் உன் மனம் கலங்கும்படியாக அவன் ஏதாவது பேசியிருக்கவேண்டும். திருடனுடைய திருட்டுப் பேச்சைக்கேட்டு நல்ல படித்த விவேகியாகிய நீ கலங்கலாமா? என் செல்வமே! இந்தச் சமாச்சாரமெல்லாம் எனக்குவண்டியோட்டி கூறினன். அவன் தூரத்திலிருந்தபடியே கவனித்துக்கொண்டே இருந்தானும். அவன் பேசியது மாத்திரம் அவனுக்குக் கேட்கவில்லையாம். அவன் பேசிய மாதிரியையும் அபிநயித்த மாதிரியையும் பார்த்தால் மிகவும் கெஞ்சிக் கூத்தாடியதாக அறிந்துகொண்டானும். அது கிடக் கட்டும். இனிமேல் நீ அவனைப் பார்க்காதே. அகஸ்மாத்தாகச் சந் தித்தாலும் பேசாமல் போய் விடு. அவனுக்கு உன்மேலுள்ள கோபத்தினல் அவன் என்ன செய்தாலும் செய்வான். அப்படிப் பட்ட திருடனை நம்பவே கூடாது. ஜாக்கிரதையாகவிரு. நேற் றிரவு அவனுடைய நண்பனெருவன் அவனைத்தேடிக் கொண்டு

வந்ததாக வேலைக்காரன் தெரிவித்தான். அவனே அவ்வாறு தன்னைத் தேடிக்கொண்டு வருபவன்போல் இங்கு ஆட்களை அனுப்பிப் பார்க்கச்செய்தாலும் செய்யலாம். அவன் எத்தகைய வேலையை வேண்டுமானாலும் செய்யத் துணிந்தவன். ஆகையால் அவனைச் சேர்ந்த எவ்விதமான விவகாரத்திலும் ஜாக்கிரதையாகவிரு......... இன்று ஸர்க்கஸ் பார்ப்பதற்குப்போவதாக தீர்மானித்திருக்கிறேன்; எழுந்திரு போய்விட்டு வரலாம்'' என்றார். இதைக்கேட்ட காந்தாமணி "அப்பா! நான் தான் முதலிலேயே சொன்னேனே எனக்குத் தலையை வலிக்கின்றது என்று; வலியோடு கண் விழிப்பது மிகவும் தொந்தரவாக விருக்குமாகையால் நான் இங்கேயே இருந்து நிம்மதியாகச் சற்று நித்திரை செய்தால் தான் எனக்கு உடம்பு சரியாக ஆகும். ஆகையினால் நான் வராமலிருப்பதே என்னுடைய தேக நிலைமைக்கு நன்றாக விருக்கும். தாங்களும் அம்மாவும் போய் வாருங்கள்'' என்றாள்.

இதைக் கேட்ட முதலியார் "ஆனால் சரி; நாங்கள் சென்று வருகிறோம். நீ ஜாக்ரதையாக இப்போதே படுத்து நித்திரை செய். வீணே விழித்துக்கொண்டிருக்க வேண்டாம். அந்தத் திருடனின் எண்ணத்தை அறவே ஒழித்துவிடு. அவன் படத்தை இனி இங்கு மாட்டாதே. எடுத்து எறிந்துவிடு. மணி ஒன்பது ஆகிறது. நாங்கள் சென்றுவருகிறோம்.'' என்று கூறி அவ்விடத்தை விட்டு எழுந்து போய் விட்டார். காந்தாமணி சோபாவில் சாய்ந்தபடியே இருக்கிறாள். தான் செல்லப்பாவிடம் பேசியது தன் தந்தைக்கு எப்படியோ தெரிந்து விட்டதை எண்ணிச் சற்றுக் கலங்கினாள். தனது வண்டியோட்டியும் தன்னுடன் கூட வந்து மணலில் நின்று தாம் சம்பாஷித்ததைக் கேட்டுக் கொண்டிருந்தது மல்லாமல் தன்னுடைய தந்தைக்குமதைத் தெரிவித்ததை எண்ண அவன்மீது அவளுக்குச்சற்று வருத்த மேற்பட்டது. என்றாலும் அவளதை மேலுக்குக் காட்டிக்கொள்ளாமலிருந்தாள். அவள் தாயார் அங்குவந்து "அம்மா! காந்தா! நான் உங்கள் பிதாவுடன் சென்று வருகிறேன். நீ வரவில்லையென்பதாக உன்பிதா தெரிவித்தார். ஜாக்கிரதையாக நித்திரை செய்.'' என்று கூறிச் சென்றுவிட்டாள். தனியாகப் படுத்திருந்த காந்தாமணியின் மனம் அப்போதும் நிம்மதி யடைந்தபாடில்லை.

அவளுக்கே இன்னதென்று விவரிக்க இயலாத விதமான சஞ்சலத்தில் அவள் மனம் ஆழ்ந்து கிடந்தது. சற்றுநேரம் சோபாவில் சாய்ந்திருந்தபின் அவள் சற்றுநேரம் எழுந்து உலாவினாள்; மீண்டும் கட்டிலில் படுத்துப்புரண்டாள்; மறுபடியும் அவ்வறையைவிட்டு எழுந்து வெளியில் வந்து சற்று நின்றாள்; உள்ளே சென்றாள். இவ்விதமே அவள் தவித்துக்கொண்டிருந்தாள். இவள் இவ்வாறு தத்தளித்தும் அவள் மனமென்னவோ செல்லப்பாவை நிரபராதிதான் என்று நம்பவில்லை. அவன்மீது நான் ஆழ்ந்த அன்பை வைத்துவிட்டதனாலேதான் இப்போதும் அவ்வன்பின் விசேஷம் என் மனத்தை பாதிக்கின்றது. சீச்சீ! பாழும் மனத்தில் அந்த அற்ப ஆசைதான் ஏன் இருக்கின்றது? அவன் பக்காத் திருட்டுப் பேர்வழி என்பதை நாம் நேரில் கண்டறிந்தபின்னர் அவனை மனதில் எண்ணக்கூடுமா? அவன் இன்று கூறிய தளுக்கான வார்த்தைகள் மனத்தை மயக்கிக் கலக்கிவிட்டன. அவனை நிரபராதி என்று நாம் எவ்வாறு நம்புவது? அவன் கூறுவதையே நம்புவதென்பது கேவலம் முட்டாள் தனமல்லவா! திருடுகிற மனிதனும், மோசம் செய்பவனும், கொலை பாதகனும், பிறர் தாரத்தை இச்சிப்பவனும், நம்பிக்கை துரோகம் செய்பவனும் தாம் செய்த குற்றங்களை ஒப்புக் கொள்வது உலகத்திலுண்டோ? தாம் எதுவும் செய்யவில்லை என்றும் அப்படி இசகுபிசகாக அகப்பட்டுக்கொண்டாலும் தாம் நியாயமாகவே செய்ததாகவும் கூறுவார்களேயன்றித் தம்முடைய குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அதைப் போலவே இந்தத் திருடனும் திருட்டை ஒப்புக்கொள்ளாமல் மாமாயம் செய்கிறான். உம். என் மனத்தை நான் முற்றிலும் மாற்றி வரும்போது இந்தத் திருடன் ஏன் என் கண்ணில் படவேண்டும். அவனுடைய ரூபலாவண்யத்தைக் கண்டவர் எவரும் அவனைத் திருடனென்று கூறமாட்டார்கள். அவனுடைய அந்த சுந்தர ரூபத்தையும், அவன் திறமையையும், நடந்து கொள்ளும் மாதிரியையும் கண்டல்லவா என் மனம் கலங்கிவிட்டது. இத்தகைய திருட்டுப் புத்தியுள்ளவர்களெல்லாரும் அவ்விதம் தான் நடப்பார்கள்போலிருக்கிறது. அடடா! நான் எத்தனை பேரிடத்தில் தாராளமாகப் பழகியும் அன்பு பாராட்டியு மிருக்கிறேன்.

இந்தத் திருடனை விவாகம் செய்து கொள்வதாக எண்ணி மோசம போய் விட்டேனே. இதுபோல் யாரேனும் போவார்களோ! ஐயோ! அந்தத் திருடனுக்கு இத்தகைய எழிலும் வசீகரத்தன் மையும் என் கடவுள் கொடுக்கவேண்டும்? நான் மோசம் போனது போல் இன்னும் யார் யார் ஏமாந்து விடுவார்களோ அவனுடைய அழகாகிய வலையில் விழுந்து." என்று எண்ண மிட்டவண்ண மாக உட்கார்ந்திருந்தாள். அச்சமயம் ஒரு வேலைக்காரன் வந்து "அம்மணி! யாரோ உங்களைப்பார்க்க வேண்டுமாம். வந்திருக் கிறார்கள். 'உள்ளே வரலாகுமா?' என்று கேட்கிறார்கள். என்ன சொல்வது?" என்றான்.

இதைக் கேட்ட காந்தாமணி "யார் அவர்கள் ஆண்பாலரா! பெண்பாலரா?" என்றாள்.

சேவகன்:—அம்மணி! ஆண்பிள்ளைதான்.

உடனே காந்தாமணி எழுந்து முன் கட்டு வாசற் படி யண்டை வந்தாள். அப்போது அங்குச் சிரித்த முகத்துடன் நின்று கொண்டிருந்த ஒரு வாலிபனைக்கண்டு, "ஓ, ஹலோ! ஹலோ! மை டியர் ப்ரதர்! கமான்! கமான்!" என்று கூறியவண்ணம் கைகுலுக்கி வர வேற்றுத் தன்னுடைய அறைக்கு அழைத்துக் கொண்டுபோய் ஓர் ஆசனத்தில் அமரச்செய்து தானும் உட்கார்ந்து "ஏது இத்தனை தூரம் இப்போதுவந்தது? உன்னைக் கண்டு வெகுநாளாய் விட்டதே." என்று கேட்டாள்.

இதைக் கேட்ட முத்துச்சாமி என்பவன் பிரியத்தோடு பேசத் தொடங்கி, "இன்று கூட நான் வருவதாகவே இல்லை. அகஸ் மாத்தாக வரும்படியாக நேர்ந்தது. நான் முக்கியமான காரியமாய் ஓரிடத்திற்குப் போய்விட்டுத் திரும்பி வரும்போது பஸ் கெட்டு விட்டது. அதனால் வண்டியோட வில்லை. எல்லோரும் எழுந்து நடந்துதான் செல்லவேண்டு மென்று வண்டியோட்டி சொல்லிவிட் டான். நான் இறங்கி வந்து கொண்டிருக்கையில் இங்கு உன் நினைவு வந்தது. சரி பார்த்துவிட்டுப் போகலாம் என்று எண்ணி வந்தேன். எங்கே அப்பா! அம்மா! ஒருவரையும் காணவில்லை நித்திரைக்குப் போய்விட்டார்களா?" என்றான்.

**காந்தாமணி:**—இல்லை; இல்லை. ஸர்க்கஸ் பார்ப்பதற்குப் போயிருக்கிறார்கள். எனக்குத் தலைவலியாக விருப்பதால் நான் போகவில்லை. ஏதோ மோட்டார்பஸ் கெட்டுவிட்ட காரணத்தைக் கொண்டாகிலும் இங்கு வருவதற்கு வழி ஏற்பட்டது பற்றி மிக்க சந்தோஷம்.

**முத்துச்சாமி:**—காந்தா! நான் வராமையைப் பற்றிக் குற்றமாகப் பேசுகின்றாயே! நான் அடிக்கடி வரப்போகவேண்டிய வழியில் நீ என்னை வைத்தாயா? நான் வருவதற்கு இடமுண்டோ? உன்னுடைய மனமே யதையறியாதா?

**காந்தாமணி:**—நண்பா! நீ எதையோ எடுத்துப் பேசுகின்றாயே. நாமிருவரும் விநேகமாக விருப்பதற்கு யாதொரு தடையுமில்லை என்பதை நான் எத்தனை தரம் கூறியிருக்கின்றேன். அதை விட்டு நீ ஏதோ பேசுகிறாயே!

**முத்துச்சாமி:**—மணீ! நீ படித்த விவேகியாயிற்றே. நீ கூட வார்த்தையை இரண்டு செய்யலாகுமா! உன்வாயினால் என்னை நீ மணப்பதாகக்கூறியதை நீ விட்டுப் பேசுகிறாயா! நான் விட்டுப் பேசுகிறேனா! நானிந்த அடையாற்றில் இருந்த வரையில் நீ என்னை நடத்தியமாதிரியும் என்னிடம் நடந்துகொண்ட மாதிரியும் உன் மனம் மறந்திருக்குமா? நான் உன் வார்த்தையை முற்றும் நம்பியிருந்தேன்; இருக்கிறேன் என்பதை நான்கூற வேண்டுமா? அதை நீ யறியமாட்டாயா? என்னுடைய அத்தை மகள் எத்தனையோ அழகாயிருக்கிறாள். அவளையே மணக்கும்படியாக என் பெற்றோர்கள் என்னை வற்புறுத்தியதும் அதற்கு நான்இசையாமல் உன் மொழியையே உறுதியாக நம்பி யிருந்ததையும் நீ மறந்துவிட்டாயா? நீ ஏதோ அறியாமையினால் சொல்லிய வார்த்தையை மாற்றினாய் என்று நினைப்பதற்கு உன்னைப் போல படிப்பாளி யாருமில்லை. நீ அன்புடன் காதலித்த அந்தச் செல்லப்பாவின் கதி என்னவாயிற்று பார்த்தாயா? நான் அவன் திருடிய அன்றுகூட உனக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதற்கும் யாதொரு பதிலும் காணவில்லை. இன்று நேரில் கடைசித் தரம் கண்டு பேசிவிட்டுப் போகலாம் என்று வந்தேன். எனக்குச் சத்துருவாக வந்த அந்தப் பாவிக்கு இத்தகைய கதி வாய்ந்ததைப்பற்றி

நான் மிகவும் மகிழ்ச்சியே அடைந்தேன். எனக்கு வைத்த பண்டத்தை வேறொருவன் கொள்ளையடித்துக்கொண்டு போக நினைத்ததைக் கடவுளே கண்டுசகியாமல் அவனை இந்த கதிக்கு ஆளாக்கிவிட்டார் போலும். அந்தப் பாவியின் மேல் உன் மனம் சென்றதனாலன்றோ என்னை நீ அடியோடு வெறுத்துவிட்டாய். இருந்தாலும் நான் எவ்வளவோ பொறுத்து வந்தேன். நீ என் மேலுள்ள பிரியத்தை வேறு ஒருவனிடம் மாற்றிவிட்டாய். அவ்வாறு நான் உன்மீது கொண்டுள்ள பிரேமையை மாற்ற இந்த ஜன்மாவில் ஆகாதென்பது நிச்சயம். காந்தா! நீ, என்னிடம் கொண்டிருந்த பிரியமெல்லாம் அப்பொழுது நிஜமென்றே நம்பினேன். இப்போது பார்த்தால் அவையெல்லாம் வெறும் வேஷமென்றுதான் தோன்றுகிறது. நான் இவ்வாறு கூறுகிறேனென்று வருத்தப்படாதே. நான் உண்மையாக உன்னிடம் கொண்டிருந்த மோகத்திற்கு நீ இவ்வாறு செய்வாயென்று நான் கனவிலும் கருதவில்லை. கண்மணி, காந்தா! நான் இனிமேல் உனக்குப் புதிதாக சொல்லப்போவது ஒன்றுமில்லை. எத்தனையோ தரம் கடித மூலமாயும் நேரிலும் சொல்லியிருக்கின்றது உனக்கு மறந்திருக்கமாட்டாது. கடைசிதரம் சமீபத்திலும் விவரமாக ஒரு கடிதமெழுதியிருக்கிறேன். அதையும் நீ லக்ஷ்யம் செய்யவில்லை. இருந்தாலும் நேரில் கேட்டறிந்துகொள்ளவே வந்தேன். நான் ஏதோ சாவதானமாகப் பேசுகிறேனே என்று எண்ணாதே. என் மனம் படும் பாட்டில் நான் என்ன செய்வேன் என்பது தெரியாது என்பதை நான் முன்னமே எழுதிய கடிதங்களில் தெரிவித்திருக்கிறேன். ஆகையால் அதை மீண்டும் கூறுவது அநாவசியம். காந்தா! இதோ என் கையில் இருக்கும் இம்மோதிரம் யாருடையது என்பதையும்மறந்துவிட்டாயோ?" என்று பேசிக்கொண்டே வருகையில் காந்தாமணி கலக்கத்துடன் பேசத்தொடங்கி, "ஆ! நண்பா! சென்றதை யெல்லாம் பேசுவதில் யாது பயன்? இம் மோதிரம் உனக்கு நான் விவாகார்த்தமாகவா அளித்தேன்? இந்த மோதிரம் அழகாக விருக்கின்றதென்று நீ ஆசைப்பட்டதால் அதையுனக்குக் கொடுத்து உன்மோதிரத்தைப் பதிலுக்கு வாங்கி எனது இஷ்டம்போல் புதுமாதிரியாகச் செய்து கொண்டேன். இதுவும் ஓர் அத்தாக்ஷியாகுமா? நான் உன்னைச் சிநேகிதனாக நேசித்தேனே

யன்றி நீ எண்ணியிருப்பதுபோல் காதல் கொள்ளவில்லை என்பதைப் பலதரமும் சொல்லியிருக்கிறேனே! அதைக் கவனிக்காமல் உன் மனப்போக்கின்படியே நீ சென்று கொண்டிருந்தால் அதற்கு என்மேல் குற்றம் கூறுவதா? நான் உன்னை மணப்பதாக ஒருபோதும் சொல்லியதே யில்லையே! அப்படி யிருக்க நீ நான் சொல்லியதாகக் கூறுவது தகுமா? உன் மனத்திலப்படி எண்ணிக் கொண்டால் அதற்கு நானும் ஒப்புக்கொண்டதாக எண்ணிவிடுவதா? என் மனதில் உன்னை நான் என்றும் ஒரே முறையாக அண்ணன்போல் நினைத்து வருகிறேனேயன்றி, நீ காதலிப்பதால் நானும் அதைச் செய்யவேண்டும் என்றும் கட்டாயமா? நான் உன்னை அண்ணுகவேபாவித்துவருவதால்நீயும்என்னைத் தங்கையைப் போலவே பாவிக்கின்ருய் என்றே எண்ணி யிருந்தேன். ஏதோ சில கருத்துகளைக் கொண்டு உன் எண்ணம் வேறுபட்ட தென்பதை அறிந்தேன். அதன்பிறகு தான் நான் சற்று தூரவிலகி இருக்கவாரம்பித்தேன். அதனால் நான் உன்னை மறந்துவிட்டதாக நீ கூறுகிருய்'' என்று பேசிக்கொண்டே வருகையில் முத்துச்சாமி இடைமறுத்து "ஆ! ஆ!! ஆ!!! காந்தாமணி! காந்தாமணி! ஐயோ! நீ எனக்கு எத்தனை தரம் முத்தங் கொடுத்திருக்கிருய்! உன் முத்துமாரியைப் பெருத நான் மாரியில்லாப் பயிர்போ லானேனே! உன்னிடம் வாதாடுவதில் எனக்கு இஷ்டமில்லை. நீ சொல்லியதையும் செய்ததையும் அறவே மறந்து பேசுகின்ருய் என்பதை உன்னுடைய நடவடிக்கைகளில் நான் அறிந்துகொண்டேன். நீ செய்ததையும் சொல்லியதையும் நீ மறந்தாலும் நான் மறக்கவில்லை. நீ என்னை வெறுத்து வேருெருவனைக் காதலித்தாய். அவன் கதி தான் சந்தி சிரிக்கும்படியாக இருக்கிறது. போனதைப் பற்றி இருவரும் மறந்துவிடுவோம். இனிமேலாவது என்னை மணந்து கொள்வதற்கு என்ன சொல்கிருய்? ஆதிமுதல் நீ என்னுடைய எண்ணத்திற்கு அனுகூலமாகவே நடந்து வந்ததை இல்லை என்று மறுத்தாலும் இனிமேலாவது எனது எண்ணத்தைப் பூர்த்திசெய்ய என்ன சொல்கிருய்?'' என்ருன்.

காந்தாமணி:—உனக்கு நான் கூறவேண்டுவது ஒன்றுமில்லை. நீ படித்துப் பட்டம் பெற்றவன்; எல்லாம் உனக்கே தெரியும்.

புது நாகரிக முறைப்படி நான் சகோதரத்வமும் அதிக சிநேகமும் பாராட்டி உன்னுடன் பழகுகிறேன். அதனால் நீ என்னை உன் மனத்திற்கொண்ட காதலுக்கு இசைந்து நடப்பதாக வைத்துக் கொள்வது நியாயமாகுமா? நான் உன் கரத்திற்கு முத்தமிட்டது, ஆங்கிலேயர்களின் கொள்கையை அனுசரிப்பதினால் ஏற்பட்டதே ஒழிய நீ எண்ணுகிறபடியல்ல. அதனால் யாது பிசகு? நான் என் மனதில் உன்னை மணப்பதாகச் சிறிதும் எண்ணவே இல்லை. நான் உள்ளாழ்ந்த சிநேகத்தினால் சமத்வமாக இருப்பதை நீ விகற்பமாக எண்ணலாகுமா? காமாலை யுள்ளவர் கண்ணுக்கு எதை நோக்கினும் மஞ்சளாகத் தெரிவது சகஜம். அதே போல் உன்னுடைய எண்ணத்தின்படியே நானுமிருப்பதாக நீ நினைத்துக்கொண்டு அதன்படியே பேசினால் அதற்குப் பதிலளிக்க நான் கடமைப்பட்டவளாவேனு? இப்போதும் இனிமேலும் உன்னினிடம் எனக்கு அத்தகைய எண்ணமில்லை. அதைக் குறித்து நீ என்னிடம் பேசவேண்டாம். நான் உன்னை மணக்கமாட்டேன். நான் காதலித்தவன் திருடன் என்று நீ ஏளனமாகக் கூறுவது எனக்கு அவமானமாக இருக்கிறது. நான் அவனோடு பழகியதனாலேயே அவனை நான் மணந்து கொள்வதாக நிச்சயித்துவிடுவது தான் சரியோ! நானுமவனும் ஒரே கிளாஸ்மேட்டாகையினால் நிரம்பவும் பழக்கமேற்பட்டு சிநேகிதர்களாக இருந்தோம். அவனுடைய நடத்தை சரியில்லை என்பது தெரிந்த பிறகு அவனிடம் பழக்கம் வேண்டாம் என்று நான் விலகி விட்டேனேயன்றி அவனை மணக்கப் போவதாக உனக்கு யார் சொன்னது? பேஷ். நீ அவனை நான் மணக்கப் போவதாக எண்ணியிருப்பது போலத் தான் உன்னை நான் மணப்பதாகக் கூறியதாகவும் சொல்கிறாய். என்னிடம் இந்த விவாகப் பேச்செல்லாம் வேண்டாம்.நான் யாரையும் விவாகம்செய்து கொள்ளத் தயாராகவில்லை. எனக்கு விவாகத்தைப் பற்றி இப்போது பேச்சே வேண்டுவதில்லை. என்னிடம் வீணாகத் தூக்கத்திற்குக் கேடாக இந்த இரவு காலத்தில் தண்டப்பேச்சு வேண்டாம். எப்போதும் போல் சிநேகபாவமாக இருப்பதற்கு ஆக்ஷேபனையே இல்லை. அதை மீறிய படிக்கட்டுக்கு போவதற்கு நான் தயாராகவில்லை. என்னை மணக்க வேண்டுமென்கிற ஆசையை விட்டுவிடு" என்று சற்றுக் கடுமையாகக் கூறினாள்.

இதைக் கேட்டதும் முத்துச்சாமிக்கு முகத்தில் கோபம் பிரமாதமாய் உண்டாய்விட்டது. கண்கள் சிவந்துவிட்டன. அவன் உள்ளே அடக்கி இருந்த ஆத்திரமெல்லாம் ஒன்றுகூடிக் கிளம்பி விட்டது. அவன் படபடத்துப் பேசத்தொடங்கி, "காந்தாமணி! என்னை இதுகாறும் ஏமாற்றியது போல் இனியும் செய்யலாமென எண்ணினுயா? 'காமத்திற்குக் கண்ணில்லை' என்னும் மூதுரைப்படி நான் என்ன செய்வேன் என்பது எனக்கே தெரியாது. என்னை நீ காதலிக்கவில்லை என்றுலும் நானுன்னையே காதலிப்பது நீ அறிந்த விஷயம். அதனைப் பூர்த்திசெய்ய நீ என்ன சொல்கிறுய்? உன்னுடைய பிற்காலத்திய நன்மையை உத்தேசித்துப் பேசு. முன்னுல் ஒருவனை இவ்வாறுதான் மணப்பதாகக் கூறி ஏமாற்றிவிட்டாய் என்பதையும் நான் தெரிந்துகொண்டேன். உன்னுடைய வழக்கமே அவ்வாறு உள்ளதுபோலும். வெள்ளைக்கார நாகரிகத்தைப் பின்பற்றி நடக்கிறபடியால் நீ இன்று ஒருவனை மணக்கப் பிரியப்படுவதும் நாளை அவனை வேண்டாமென்று வெறுப்பதுமாக பேரம் செய்துவருகிறுய். உன் வாயினுலேயே எத்தனைதரம் நீ என்னை மணப்பதாகக் கூறிக் கடைசியில் இப்போது அதைக்கூறவே இல்லை என்று சாதிக்கின்றுயே. காந்தா! நீ என்னை மணம் செய்துகொள்வதாகக் கடவுளறியச் சொல்லியதை மாற்றி இல்லை என்கிறுயே இது நீதியா?" என்று வெகு ஆத்திரத்தோடு கேட்டான்.

இதைக்கேட்டதும் காந்தாமணி திடீரென்று இடி இடிக்கக் கேட்டதுபோல் பயந்தாள். அவள் தேகம் நடுங்கியது. பின் அவள் மெல்ல பேசத்தொடங்கி "நண்பா! நீஎன்னை மிரட்டி பயமுறுத்துவதற்கா இங்கு வந்தாய்? ஆதியில் உனது தந்தையும் என் தந்தையும் சிநேகிதர்களாக இருந்தகாலத்தில் என் தந்தைக்கு என்னை உனக்கு விவாகம் செய்விக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அவருடைய எதிரில் அவர் மனம் கோணுமலிருக்கும் பொருட்டு நான் என் மனதிற்கு விரோதமாக உன்னை மணப்பதாக விளையாட்டாகச் சொல்லியிருக்கலாம். அந்த வார்த்தை மாண்டுபோய் எந்தக் காலமாயிற்று. அதனை இப்போது எதற்குப் பேசுகிறுய்? நீ இங்கு வந்து உன்னிடம் பேசியது என் தந்தைக்குத் தெரிந்தால் என்னையே கடிந்து கொள்வார். உன்னிடத்தில் அவருக்குப் பிடிப்பு அற்று

விட்டது என்பதை முன்னொரு நாள் உன் செய்கையினாலேயே நீ அறிந்துகொள்ளவில்லையா! அவைகளையெல்லாம் மறந்து இவ்வாறு பேசுகின்றாயே? நீ காதலிப்பதற்காக நான் மனவிரோதமாக உன்னை மணப்பதற்குச் சம்மதப்படுவேனா! அது ஒருகாலும் முடியாது. என் மனத்திற்கு யாரை விவாகம் செய்துகொள்வதென்று தோற்றுகின்றதோ அவர்களைத்தான் நான் செய்து கொள்வேன். உன்மீது என் மனம் என்றும் நாடவில்லை. வீணே உன்னைநான் காதலித்ததாகச் சொல்லவேண்டாம். உன்னுடைய நன்மையைக் கோரியே இதைச் சொல்கிறேன். நீ என்னுடன் சண்டை செய்வதற்கே வந்தாய்போல் இருக்கிறது; சரி, எனக்கு நித்திரை வருகின்றது; நீ செல்வதானாலும் சரி, அல்லது இங்குப் படுத்துக்கொள்வதானாலும் சரி உனதிஷ்டம்போல் செய். என்னால் இனிக் கண் விழிக்கமுடியாது'' என்று ஒருவித முடுக்காகக் கூறி ஆசனத்தை விட்டு எழுந்தாள்.

இவள் கூறியதையும் எழுந்து நிற்பதையும் கண்ட முத்துச்சாமி காந்தாவின்மீது கட்டுக்கடங்காக் கோபங்கொண்டு விறைக்க விறைக்க அவளை உற்றுப்பார்த்து ''காந்தா! நீ மேனாட்டு நாகரிகத்தை முற்றும் கைப்பற்றி அவர்களைப்போலவே இருப்பதன் பயனை சீக்கிரமே அடையப்போகின்றாய்! நானும் அந்நாகரிகத்தைக் கைப்பற்றுகின்றவன் என்றாலும் உன்னைப்போல் இத்தகைய மோசமில்லை. உன்னுடைய சகவாசத்தினால் நானும் அசல் ஆங்கிலேயர்களைப் போலவே தகுந்த வழிதேடுகிறேன். என்னைக் கையிலாகாத முட்டாள் என்று எண்ணாதே, நான் உன்னை அடையாமலிருப்பதில்லை; இது திண்ணம். இப்போதும் நான் சாந்தமாகவே கேட்கிறேன். நீ என்னை விவாகம் செய்து கொண்டால் மட்டும் சுகப்படுவாயே யன்றி மறுத்தால் மரிக்கவேண்டியதுதான். என்னை நீ இவ்வளவு தூரம் சொல்லியதைமாற்றி ஏமாற்றமடையச் செய்ததை நான் விணுக்கமாட்டேன்; என்பழியைத் தீர்த்தே விடுவேன். நீ இப்பொழுது என்ன சொல்கிறாய்?'' என்று மீண்டும் பயமுறுத்தியே கேட்டான்.

இதைக்கேட்ட காந்தாமணி மனம் பயமடைந்தது. முத்துச்சாமியின் மூர்க்க வார்த்தை அவள் நெஞ்சைப் பிளக்கின்றது. அவள் மீண்டும் பேசத்தொடங்கி, ''முத்துச்சாமி! எந்தெந்த சமயம்

என்மனம் எவ்வாறுசெல்கின்றதோ அவ்வாறுதான் நடப்பேன். உன்னுடைய கட்டாயத்திற்காக நான் உன்னை மணக்கமாட்டேன். அப்பொழுது சொல்லியதை வைத்துக்கொண்டு நீ சொல்வது சரியில்லை. அப்போது என் மனம் அவ்வாறு கூறுவதற்கு இஷ்டப்பட்டது; இப்போது இஷ்டப்படவில்லை. அவைகளை யெல்லாம் நீ கேட்பது சரியல்ல. என்னிஷ்டப்படிதான் நான் செய்வேன். இதைப்பற்றி நீ என்னிடம் கேட்கவேண்டாம். இனிமேல் அந்த வார்த்தைக்குப் பதில் சொல்ல நான் தயாராகவில்லை; நீ எழுந்துபோகலாம்.'' என்று கூறி சற்றுதூரம் சென்று நின்றாள்.

முத்துச்சாமிக்கு அதற்குமேல் தாங்கமாட்டாத கோபமும் ஆத்திரமும் வந்து சூழ்ந்துகொண்டன. அவனுக்கு அப்போதிருக்கும் மன நிலைமையில் காந்தாமணியை அவன் ஒரே குத்தாகக் குத்திவிடலாமா என்று எண்ணினான். அதற்குள் ''ஆகட்டும் இவள் மேனாட்டு நாகரிகத்தில் ஈடுபட்டு அவர்களைப் போல நடப்பதற்குப் பதிலாக நானுமப்படியே செய்து இவளை வருத்தி இவள் கொழுப்பை அடக்கி மணம் செய்து கொள்ளும் படியான நிலைமைக்குக் கொண்டு வருகிறேன்'' என்று மனத்தில் நினைத்துக்கொண்டு, ஆவேசத்துடன் காந்தாமணியின்மீது பாய்ந்தான். அவன் தன்மேல் பாயவருவதை ஜாடையாலறிந்த காந்தாமணி ஓ என்று ஒரு கூச்சலிட்டாள். வேலைக்காரர்களெல்லாம் அவரவர் இடத்தில் படுத்துவிட்டார்கள். அப்போது சுமார் 11-மணிக்குமேலிருக்கலாம் நித்திரைக்குட்படும் காலமாகையால் வேலைக்காரர்களில் பலர் நித்திரைபோய் விட்டார்கள். காந்தாமணி படுக்கையறை மெத்தையில் வீதிப்புறமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அப்போது அவள் கூச்சலிட்டது அங்கு மாடியில் ஆடிவிழுந்துகொண்டிருந்த வேலைக்காரன் காதில் விழுந்தது. உடனே அவன் என்னவோ ஏதோ என்று பயந்தவாறு சரேலென்று எழுந்து காந்தாமணியின் அறைக்குவந்தான். வேலைக்காரனை வாசற்படியண்டை கண்ட முத்துச்சாமி தன்னுடைய ஜேபியில் வைத்துக்கொண்டிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து வேலைக்காரன் காலில் குறிபார்த்துச் சுட்டுவிட்டான். அவன் ஆ என்று அலறியவாறு கீழே விழுந்து விட்டான். உடனே முத்துச்சாமி காந்தாமணியின் முகத்தை

ஒரு கைக்குட்டையால் மூடி அவளது கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். இவன் பிடியிலிருந்து திமிறமுடியாத காந்தாமணி தவித்துப் பதறித்துடிக்கும் சமயம் அவள் முகத்தில் மூடப்பட்ட கைக்குட்டையால் மயக்கமேற்பட்டு அப்படியே சாய்ந்து ப்ரக்ஞையற்றுவிட்டாள். இவள் விழுந்துவிட்டதைக் கண்ட முத்துச்சாமி, "உம், உன் கொழுப்பையும் அடக்கி எனக்குப் போட்டி சத்ருவாக வந்த அந்தச்செல்லப்பாவின்உயிருக்கும்உலைவைக்கும்வழியைத்தேடி இருவரையும் சித்திரவதை செய்கிறேன்" என்று எண்ணியவாறு அங்கு போடப்பட்டிருந்த சோபா ஒன்றில் காந்தாமணியைக் கடத்திவிட்டு அங்கு வேலைக்காரனுடைய காலில் துப்பாக்கி பட்டதனால் பெருகும் ரத்தத்தைக் காந்தாவின் படுக்கையின்மேலுள்ள பெட்சீட்டினால்துடைத்து அதைக் கட்டிலின்மேலேயேபோட்டுவிட்டுக்காந்தாமணியின் தலையில் வைத்திருந்த புஷ்பத்தைப் பிய்த்துத் தாறுமாறுக எறிந்து, அவள் கைவளையலை ஒடித்து ஒருபுறம்போட்டு, அங்கு ஒரு மூலையில் மாட்டியிருந்த செல்லப்பாவின் பெயர் வரைந்த சவுக்கத்தை எடுத்து அதில் ரத்தக்கரையாக்கி ஒருபுறம் போட்டுவிட்டு, அங்கு மேஜையின்மீது இருக்கும் ஒரு பேப்பரை எடுத்து அதில் காந்தாமணி ஆபத்துவேளையில் தன்னுடைய உயிர் போகும் தருவாயில் எழுதுவதுபோல் பின்வருமாறு கோணல் மாணலாக எழுதினுன். "ஆ அம்மா! அப்பா!—தப்பவழியில்லை, கொலைபாதகன்செல்லப்பா என்னைக்கொலைசெய்ய" என்று மொட்டையாக ஒரு துண்டுக் கடிதத்தில் எழுதி அதை ஓர் மூலையில் போட்டுவிட்டுக் காந்தாமணியைத் தூக்கித் தன் தோளின்மீது சாற்றிக்கொண்டு புறப்பட்டான்.

துப்பாக்கியால் சுடப்பட்ட மனிதன் சற்று நினைவைப் பெற்றுப் பார்க்கும்போது முத்துச்சாமி இன்னொரு வாசற்படி வழியே செல்வதைக் கண்டான், வேலைக்காரனுக்கு மயக்கம் தெளிந்துவிட்டதென்று தெரிந்த முத்துச்சாமி அவன் காதில் விழும்படியாக "மாறுவேடத்துடன் வந்த செல்லப்பாவை யாரோவென்று எண்ணி உள்ளே விட்டு ஏமாந்தாயே! செல்லப்பாவின் சாமர்த்தியத்தைப் பார்த்தாயா! காந்தாமணியின் சவத்தையும் இங்குவிடாமல் மீன் முதலிய ஜந்துக்களுக் கிரையாகக் கடலில் கொண்டு எறி

ந்துவிடுகிறேன்'' என்று கூறியவாறு மாடிப்படி வழியே இறங்கி விட்டான். காலில் அடிபட்ட வேலைக்காரன் ப்ரக்ஞைபடைந்து கண்ணை விழித்துப் பார்க்கும்போது இவன் கூறியது அவன் காதில் விழுந்தது. "ஐயோ! ஐயோ! கொலை கொலை! அநியாயம்! அநியாயம்! எல்லோரும் வாருங்கள். கொலை பாத கன் ஓடிவிடுகிறான். இச்சமயம் நித்திரையும் வருகின்றதா? ஐயோ! கால் போய்விட்டதே!'' என்று பெரியதோர் கூச்சலிட் டான். துப்பாக்கியின் வெடிச் சத்தத்தைக் கேட்ட சில வேலையாட் கள் திடீரென்று கண்விழித்துப் பார்த்தார்கள். அவர்களுக்கு நல்ல தூக்கக் கலக்கமாகையாலும் அந்தச் சத்தத்திற்குப் பிறகு எதுவும் சந்தடி இல்லாமலிருந்ததாலும் அருகிலுள்ள அம்மன் கோயி லில் அப்போது திருவிழா நடந்து வருகிறதாகையால் அந்தத் திரு விழாக்காக வேட்டோ அவுட்டோ போட்டதாக எண்ணி மீண்டும் படுத்துவிட்டார்கள். இதற்கு அநுகுணமாகப் பெரிய காற்றினால் ஜன் னல் கதவுகள் சில பட்பட்டென்று அடித்துக்கொண்டே இருந்தன. முத்துச்சாமி மாடிப்படிவழியே இறங்கி மெல்லநடந்து சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே வீதியை அடைந்தான். அங்கு திண்ணைமீது இருவர் காவல் படுத்திருந்தார்கள். அவர்களொருகால் விழித்துக் கொண்டால் என்ன செய்வது என்றுபயந்தவாறுமுத்துச்சாமி மெல்ல அடிமேலடியாக வைத்துக்கொண்டு நடந்து வந்து கதவைத் திறந்து கொண்டு வீதியில் இறங்கிவிட்டான்.

அங்குக் காலில் அடிபட்ட வேலைக்காரன் மீண்டும் உரத்த குர லால் "ஐயோ! எழுந்து வாருங்கள். பாவி திருட்டுத் தடியனான செல் லப்பா மோசமாக உள்ளே வந்து என்னையும் காலில் சுட்டுத்தள்ளி விட்டு எஜமானியம்மாளையும் கொலைசெய்து விட்டுத் தூக்கிக்கொண்டு போகிறானே'' என்று பெருத்த கூச்சலிட்டவாறு உட்கார்ந்தபடி நகர்ந்துகொண்டே மெத்தைப்படியிருக்குமிடத்தை நோக்கி வரலா னான். இதற்குள் கீழே படுத்திருந்த வேலைக்காரர்கள் எழுந்து எங்கே என்ன கூச்சல் கேட்கின்றதே என்று நித்திரைக் கலக்கத் தோடு கவனித்தார்கள். காலில் அடிபட்டவன் விடாமல் கூச்சலிட்ட வண்ணமிருந்தா னதலால் மற்ற வேலையாட்கள் எழுந்து அலறி அடித்துக்கொண்டு இந்தக் கூச்சல் நம்முடைய மெத்தையிலிருந்து

தான் வருகின்றது என்று தெரிந்துகொண்டு உள்பக்கத்து மெத்தைப் படி வழியே ஏறி வரத்தொடங்கினார்கள். இவர்கள் வருவதற்கு முன்னமேயே முத்துச்சாமி இறங்கிப் போய்விட்டான். இவர்கள் மெத்தை ஏறிவந்ததும் காந்தாமணி அறையைத் தாண்டி, காலில் துப்பாக்கியடி பட்டவன் நகர்ந்துகொண்டே போவதைக்கண்ட மற்ற வர்கள் திடுக்கிட்டுப்போய் "ஐயோ! பச்சை என்ன சமாச்சாரமடா!" என்று கூவியவாறு எல்லோருமவனை வளைத்துக்கொண்டார்கள். அவன் காலில் துப்பாக்கியால் அடிபட்டு ரத்தம் ஒழுகுவதைக் கண்ட மற்றையோர் "ஐயோ! இதென்னடா கர்மம்! உன் காலில் எப்படிக் காயமேற்பட்டது? நடந்த சேதியென்ன சொல்" என்று அலறியவாறு ஒருமித்துக் கூச்சலிட்டார்கள். இதைக் கண்ட பச்சை "அடே அதோ போகிறான் திருடன்! பிடியுங்கள்! பிடியுங்கள்! வீதிப் பக்கத்து மாடி வழியாக இறங்குகின்றான். அநியாயமாய் நம்முடைய எஜமானியம்மாளைக் கொன்றுவிட்டான். ஓடுங்கள்! ஓடுங்கள்!" என்று கூக்குரலிட்டான். இதைக் கேட்ட ஏனையோரும் திடீரென்று இடி இடித்தது போலான குழப்பத்துடன் "ஆ! ஆ! எஜமானியம்மாளையா கொலை செய்துவிட்டான்" என்று கூவியவாறு வீதியை நோக்கி ஓடினார்கள். இதற்குள்ளாக வீதியில் துயின்றுகொண்டிருந்த இருவரும் இந்தக்கூக்குரலைக் கேட்டு எழுந்து என்னவென்று கேட்கலானார்கள். கூச்சலிட்டுக் கொண்டு வந்தவர்கள் வீதியிலிருந்தவருக்குச் செய்தியைக் கூறியவாறு கேட்டைத் திறக்கலானார்கள். கதவின் அப்புறம் (வீதிப்புறம்) சங்கிலி இட்டிருப்பதாகத் தெரியவந்தது. அடேய் போன திருடன் வெளிப்புறம் சங்கிலிபோட்டு விட்டுப் போயிருக்கிறான் போலவிருக்கிறது. ஐயோ! சங்கடமே! எஜமான் வீட்டிலில்லாத காலத்தில் இவ்வித அக்கிரமமும் நடக்குமோ! சீக்கிரம் ஒருவன் இந்தச் சுவரின்மீது ஏறிக் குதித்துக் கதவைத் திறக்கட்டும்" என்றார்கள். உடனே ஒருவன் சுவரேறிக் குதித்துக் கதவைப் பார்த்தான். கதவு பூட்டப்பட்டிருப்பது கண்டு "ஐயோ! இது பூட்டியிருக்கின்றது. எல்லோரும் சுவரேறிக் குதியுங்கள்" என்று வெளியிலிருந்து கத்தினான். உடனே எல்லோரும் பங்களாவின் சுவரின் மீதேறிக் குதித்து நாற்புறமும் சுற்றிப் பார்த்து திருடன் பிடியுங்கள் பிடியுங்கள் என்று பலமான கூச்சலிட்டுக்கொண்டே ஓடலானார்கள்.

இதற்குள் வீதியில் அக்கம்பக்கம் இருக்கும் வீடுகளிலுள்ள மனிதர்களெல்லோரும் வந்து கூடிவிட்டார்கள். "என்ன! என்ன! எங்கே திருடன் வந்தான்? என்ன நடந்தது?" என்று கேட்டுக்கொண்டே அவர்களும் ஓடவாரம்பித்தார்கள். இதற்குள் பெரிய கூட்டமும், கூக்குரலும், கலவரமும் அதிகரித்துவிட்டன. அங்கு வீதியில் கூடிய கூட்டத்திற்கு இன்னது நடந்ததென்ற தகவல் தெரியாமலேயே அவர்களும் பெரிய கூச்சலிட்டு ஓடுகின்றார்கள். எங்கும் யாரையும் காணவில்லை.

காந்தாவைத் தூக்கிக்கொண்டு வெளிக்கிளம்பிய முத்துச்சாமி கதவை உள்ளிருந்து திறப்பதற்கு முடியாமல் வெளிப்புறத்தில் ஒரு பூட்டையும் பூட்டிவிட்டுச் சந்தடி செய்யாமல் நடந்து வந்து அங்குக் கொஞ்சதூரத்தில் தான் தயாராக வைத்திருந்த மோட்டார் வண்டியில் அவளைப் படுக்கவைத்து வண்டியை மான் வேக மனோவேகமாக விட்டுக்கொண்டு போய்விட்டான்.

வீதியில்தேடிக்கொண்டு வந்த வேலைக்காரர்களெல்லாரும் வெகு தூரம் சுற்றிப் பார்த்தார்கள். அங்கு தெருவிலிருந்த மரம் முதலியவைகளிலெல்லாம் ஏறிப் பார்த்தார்கள். எங்கும் ஒருவரையும் காணவில்லை. எல்லோரும் இன்னது செய்வதென்று தெரியாமல் கலங்கி விழிக்கின்றார்கள். "ஐயோ! எஜமான் வந்தால் என்ன பதில் சொல்வது? குமாஸ்தாவும் வீட்டிலில்லையே! ஐயோ! எந்தப் பாவி வந்து இவ்வாறு எங்கள் எஜமானியைக் கொலைசெய்து தூக்கிக் கொண்டு போய்விட்டானோ தெரியவில்லையே?" என்று கதறிக் கொண்டே பங்களாவிற்குச் சிலர் திரும்பி வந்தார்கள். இதற்குள் பச்சை நகர்ந்துகொண்டே வீதிப்பக்க மிருக்கும் மாடிப் படி வழியாக இறங்கி வீதியை அடைந்தான். திரும்பி வந்த வேலைக்காரர்கள் பச்சையை நோக்கி "என்ன சங்கதி? நடந்ததைத் தெரிவி. எங்கே தேடினாலும் யாரையும் காணவில்லையே? சிலர் இன்னும் தேடிக்கொண்டே போய்க் கொண்டிருக்கின்றார்கள். எப்படி திருடன் வந்தான்?" என்று கூக்குரலிட்டுத் துடித்தார்கள். இதற்குள் அங்கு வீதியிலிருந்த கூட்டங்களெல்லாம் பங்களாவின் உள்ளே வர ஆரம்பித்தார்கள். எல்லோரையும் உள்ளேவிடாமல் வேலைக்காரர்கள் தடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். இதற்குள் பச்சை ஒருவனைப் பார்த்து

"ஐயோ! சீக்கிரம் நமது மோட்டாரைப் போட்டுக்கொண்டு சர்க்கஸ் கொட்டகைக்குப் போய் எஜமானை உடனே அழைத்துக் கொண்டு வா. விவரத்தை அங்கு அவரிடம் தெரிவிக்காதே; அவர்கள் துடித்து மயக்கத்திலாழ்ந்து விடுவார்கள். ஜாக்கிரதையாகப் பேசித் திருடன் என்ற செய்தியை மட்டும் கூறி அழைத்துக் கொண்டு வா" என்று கூறினன். உடனே அந்த வேலைக்காரன் வண்டியைத் தயார் செய்து கொண்டு போய்விட்டான்.

பச்சை அங்குள்ள மற்றைய வேலையாட்களுக்கு அங்கு நடந்த விவரங்களை யெல்லாம் கூறினன். இதைக் கேட்ட எல்லோருக்கும் பெரிய கலக்கமும் குழப்பமும் செல்லப்பாவின் மீது ஆத்திரமும் தோன்றின. பின் ஆவேசம் கொண்டவர்களைப் போல "ஐயோ! படுபாவி! நாசகாலன்! இப்படியும் பகை வைத்துக் காத்திருந் தானு! சண்டாளன் கையில் அகப்படவில்லையே! அகப்பட்டிருந் தால் நசுக்கி விடுவோமே" என்று கட்டுமீறிய ஆத்திரத்துடன் கூச்சலிட்டுக் கதறுகிறுர்கள். இதற்குள் மணி சுமார் ஒன்று ஆய் விட்டது.

மோட்டார் வண்டியில் சென்ற முனியாண்டி என்பவன் சர்க்கஸ் கொட்டகையை அடைந்தான். அவன் என்னவென்று சமாச்சாரத் தைத் தெரிவிப்பதென்று குழம்பினுன். அவனுக்கு மனம் பதறியது. "தங்கள் உயிருக்கு உயிராக எண்ணியிருக்கும் சின்ன எஜமானியம் மாளின் கொலையைக் கேட்ட வுடனேயே அவர்களுடைய உயிர் நீங்கிவிடுமே! என்ன செய்வேன்? இந்த விபரீதமான செய்தியை எவ் வாறு தெரிவிப்பேன்" என்று கலங்கியவாறு மெல்ல உள்ளே செல்ல முயன்றுன். உள்ளேகும்பல் நிறைந்திருக்கின்றது. முதலியாரை எந்த விடத்திலிருக்கிறுர் என்று அவன் தேடுவான். முதல் வகுப்பு இடத் தில் அளவற்ற பெரிய மனிதர்கள் நிறைந்திருக்கிறுர்கள். முதலியாரின் பெயரைச் சொல்லியனுப்பினுலும் அவரைத் தெரிந்து கொள்வதெப் படி? உள்ளே விடமாட்டார்களே, அவன் எப்படிச் செல்வான்? ஆகை யினுல், அவன் பலவிதமான கலவரத்துடன் அங்கு உட்கார்ந்திருக் கும் அந்த சர்க்கஸைச் சேர்ந்த மனிதனைப் பார்த்து, "ஐயா! இங்கு எங்கள் எஜமானராகிய.........................முதலியார் வந்திருக்கிறுர். அவரை ஒரு முக்கியமான அவசர காரியமாய் நான் பார்க்கவேண்

டும். தயைசெய்து என்னை உள்ளே விட்டாலும் சரி. அல்லது தாங்கள் சென்று அவரை அழைத்து வந்தாலும் சரி. இவ்விரண்டில் ஒன்று செய்யவேண்டுகிறேன். அவசரம்; பெரிய ஆபத்தான சமாசாரம்.'' என்று கூறினன்.

இதைக்கேட்ட அந்த மனிதன் ''நான் சென்று அழைப்பதென்றால் ஒவ்வொருவராக விசாரிக்க நேரிடும். ஆகையால் நீயே சென்று அழைத்துக் கொள்ளலாம்'' என்று கூறினன். உடனே முனியாண்டி உள்ளே சென்று நடுங்கியவாறு தன் எஜமானன் உட்கார்ந்திருந்த விடத்தைக் கண்டு பிடித்துக்கொண்டு எதிரே சென்று நாத் தடுமாற குரல் நடுங்க மெல்லப் பேசத்தொடங்கி ''எஜமானே! உடனே எழுந்து வாருங்கள்.'' என்றான்,

அங்கு உட்கார்ந்திருந்த முதலியாரும் அவருடைய மனைவியும் சற்றும் எதிர்பாராத விதமாக முனியாண்டி வந்து நின்றதைக் கண்டு திடுக்கிட்டு வியப்புறும் சமயம் அவன் கூறியதைக் கேட்டதும் அவர்கள் இன்னதென்று விவரிக்க இயலாத விதமான மனக் கலக்கமுற்று, பதறப் பதற ''என்ன! என்ன! என் உன்னுடைய தேகம் நடுங்குகின்றது? என்ன நடந்தது? குழந்தைக்குத் தலைவலி என்று கூறினளே, ஜுரம் வந்துவிட்டதா?'' என்று பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டே எழுந்திருந்தார்கள். இதைக்கேட்ட முனியாண்டி ''சீக்கிரம் வாருங்கள்; பிறகு பேசிக்கொள்வோம்'' என்றுகூறி முன்னல் நடந்தான். பிறகு மூவரும் வீதியை அடைந்து மோட்டாரில் ஏறிக்கொண்டு விஷய மின்னதென்று அறியக்கூடாமல் துடித்தவாறு செல்லலானர்கள். முதலியார் முதலில் வந்த மோட்டார்காரும் பின்னல் வேகமாக வரத்தொடங்கிற்று. சில நிமிடங்களில் அடையாற்று பங்களாவைஅடைந்ததும்அங்குவீதியில் கும்பல் நிறைந்து கிடப்பதையும்,ஒரே கூக்குரலாக 'ஓ' என்ற சத்தம் குடிகொண்டிருப்பதையும் கண்ட முதலியாரும் அவருடைய மனைவியும், ''ஐயோ! என்ன விபரீதம் நேர்ந்துவிட்டதோ தெரியவில்லையே! இந்த அர்த்தராத்திரியில் ஏன் இத்தனை கூட்டமும், குழப்பமும், கூக்குரலும் அமர்க்களப்படவேண்டும். அவர்கள்பேசுவதன் தகவலே தெரியவில்லையே!'' என்று குழம்பிக்கொண்டே இறங்கிப் பங்களாவின் உட்புறத்தை யடைந்தார்கள்.

அங்கே கூடியிருந்தவர்களில், பச்சை முதலிய வேலைக்காரர்கள் இவர்களைக் கண்டவுடனே "ஐயோ! எஜமானே! அநியாயக் கொள்ளையை என்னென்று கூறுவோம். பாவி சண்டாளன் கொலைபாதகன் அடாத அக்ரமத்தைச் செய்து விட்டுத் தப்பித்துக் கொண்டு போய் விட்டானே. ஐயோ! என் செய்வோம்?" என்று கூறிக் கூச்சலிட்டுக் கதறினார்கள். இதைக்கேட்ட முதலியாரும் அவர்மனைவியும் தீயின் மீது நிற்பவர்போலத் துடிதுடித்து "ஆ! என்னவிபரீதம் நடந்துவிட்டது? குழந்தை எங்கே? காந்தாமணி! காந்தாமணி! என்று கூவியழைத்துக் கொண்டே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு நேரே காந்தாமணியின் அறைக்கு வீதிப்பக்கத்து மெத்தைவழியாக ஏறிச் சென்றார்கள். அங்கு வாசற்படியண்டை சென்றபோதே ரத்தம் வெள்ளமாகத் தேங்கி இருப்பதைக் கண்ட இருவரும் "ஐயோ! இதென்ன ரத்தம் தேங்கியிருக்கின்றதே!" என்று பதறிக்கொண்டே உள்ளே சென்று முற்றும் பார்க்கக் காந்தாமணி அவ்வறையில் இல்லாமையால் "ஐயோ! குழந்தை எங்கே? தகவல் ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே? அடே முனியாண்டி! பச்சை! மருதா! எல்லோரும் இங்கு வாருங்கள்" என்று கூச்சலிட்டழைத்தார். இதற்குள் பச்சையைத் தவிர மற்றவர்கள் அங்கு வந்திருந்தார்கள். பச்சையும் தட்டித் தடுமாறியவண்ணம் நகர்ந்துகொண்டே மெத்தையை அடைந்தான். பச்சை எஜமானைப்பார்த்து "ஐயோ! எஜமானே! முன்னால் போலீஸ்காரர்களுக்கு டெலிபோன் செய்யுங்கள். என் காலையும் உடைத்துவிட்டானே பாவி. எஜமானே! தாங்களும் எஜமானியம்மாளும் சென்ற சிறிது நேரங்கழித்து யாரோ ஒரு மனிதன் இங்குவந்து நமது சின்ன எஜமானியம்மாளைப் பார்க்க வேண்டும் என்று கேட்டான். நான் உடனே எஜமானியம்மாளிடம் தெரிவித்தேன். எஜமானியம்மாள் எழுந்து வந்து வந்தமனிதனைப் பார்த்து மரியாதையோடு தன்னறைக்கு அழைத்துக் கொண்டுப் போனார்கள். நான் வந்தவனை யார் என்று கவனிக்கவில்லை. அம்மாளும் வந்த மனிதனும் உள்ளேயே வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் என்னிடத்தில் படுத்துக்கொண்டேன்; அப்படியே கண்ணயர்ந்து விட்டேன். இன்னும் மற்றவர்களும் அவரவர்களிடத்தில் படுத்

துக் கொண்டு கண்ணயர்ந்து விட்டார்கள். நான் நித்திரை செய்துகொண்டிருக்கும் சமயம் விபரீதமானதும், அபாயகரமானதும், பயங்கரமானதுமான கூச்சல் கேட்டது. உடனே நான் கண்விழித்துக் கொண்டு எஜமானியம்மாள் அறையை நோக்கி வந்தேன். வாசற்படியண்டை வரும்போதே வந்த மனிதன் திடீரென்று தனது சட்டைப்பையிலிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்து என் காலில் குறிபார்த்துச் சுட்டுவிட்டான். அப்படியே ப்ரக்ஞையற்று விழுந்துவிட்டேன். பிறகு எனக்கு நினைவு வந்ததும் நான் கண் திறந்து பார்க்கும்போது அந்த மனிதன் எஜமானியம்மாளின் கழுத்திலே கைவைத்து அழுத்தி அப்படியே தோளில் சாத்திக்கொண்டு

"மாறு வேடத்துடன் வந்த செல்லப்பாவை யாரோவென்று எண்ணி உள்ளேவிட்டு ஏமாந்தாயே! செல்லப்பாவின் சாமர்த்தியத்தைப் பார்த்தாயா? காந்தாமணியின் சவத்தையும் இங்கு விடாமல் மீன் முதலிய ஜந்துக்களுக் கிரையாகக் கடலில் கொண்டு எறிந்து விடுகிறேன்''

என்று கூறிக்கொண்டே விசையாக நடக்கலானான். நான் என்னால் கூடியவரையில் கூச்சலிட்டேன். எனக்குக் கால் போய்விட்டபடியால் நடக்கச் சக்தியற்றவனாய் விட்டேன். என்னுடைய கூச்சலைக் கேட்டு மற்றவர்கள் எல்லோரும் ஓடிவந்தார்கள். நான் திருடன் திருடன் என்று கூச்சலிட்டேன். எல்லோரும் வீதிப்பக்கம் ஓடித் துரத்தச் சென்றார்கள். இதற்குள் அந்த பக்காத் திருடன் ஓரே மாயமாய் மறைந்ததுமல்லாமல் வீதிப்பக்கம் கேட்டையும் பூட்டிவிட்டுப் போய்விட்டான். எல்லோரும் சுவரின் மீது எறிக் குதித்து வீதியை அடைந்து பூட்டை உடைத்துக் கதவைத் திறந்தார்கள். வீதியில் நாலாபக்கமும் எங்குந் தேடியும் அந்தத் திருடனைக் காணவில்லையாம். கூட்டம் கூடிவிட்டது. நான் யாரையும் உள்ளே விடாமல் பார்த்துக்கொண்டே உங்களை அழைத்துக்கொண்டு வருவதற்கு ஆளை யனுப்பினேன். பாவி செல்லப்பா திருட்டுக் கழுதை இவ்வாறு செய்துவிட்டானே'' என்று கூறிக்கொண்டே வருகையில் காந்தாமணியைக் கொலைசெய்தான் என்றதை யறிந்ததும் அவ்விருவரும் 'ஆ! என் கண்ணே காந்தா!' என்று கூவியவாறு வெட்டிச் சாய்த்த மரம் போல விழுந்து மூர்ச்சையாகி விட்டார்கள்.

உடனே அங்கிருந்தவர்கள் அவர்களுடைய மூர்ச்சையைத் தெளிவித்துச் சமாதான வார்த்தைகளைக் கூறித் தேற்றினார்கள். மூர்ச்சை தெளிந்த இருவரும் ஓவென்று கதறிப் புலம்புகிறார் கள். "ஐயோ! என் செல்வமே! உன்னை அந்தக் காதகன் மாலை யில் கடற்கரையில் சந்தித்தான் என்பதைக் கேட்டவுடனே என் வயிற்றில் திடீரென்று விபத்துக் குறி தோன்றிற்றே! ஐயையோ! நான் பயந்து கொண்டிருந்தபடியே பாவி செய்துவிட்டானே! அந்தச் சண்டாளனை வதை செய்து வெட்டி எறிந்தாலும் என் வயிற்றெரிச் சல் தீராதே! என் குடிக்குக் கோடரிக்காம்பாக அந்தப் பாவி எங் கிருந்து வந்தானோ தெரியவில்லையே? ஆ! ஐயோ! என் கிளியே! என் ரத்தினமே! என் செல்வமே! காந்தாமணி! உனக்கு எமனாக அந்தப் பாவி காத்திருந்தானோ? ஐயோ! உன் சவத்தைக்கூட வைக் காமல் மீன் முதலிய ஜந்துக்கள் தின்று சுகிக்கட்டும் என்று கூறிய அவன் நாவை அறுத்துத் துண்டம் செய்யவேண்டாமா? அவன் திருட்டுத்தனத்திற்கு ஒத்தாசைக்கு வரவில்லைஎன்ற பழியைத்தீர்த் துக்கொண்டு விட்டானே! அடா! பாதகா! கொலை பாதகா! எத்தனை காலமாக என் கண்ணைக் குத்தவேண்டுமென்று காரம் வைத்திருந் தாயடா துரோகி! உன்னை என் குழந்தை என்ன செய்தாளடா? சண்டாளா! ஐயோ! முதலில் வந்த கடிதத்தைக் கண்டபோதே நான் அந்தப் பாவியை விட்டு விலகிவிடு என்று கூறியதைக் கேளா மல் போய்விட்டாளே! அன்றே அவனை ஒழித்திருந்தால் என் குடும்பத்திற்கு இத்தகைய கொடுமை வந்திராதே! கிராதகனை நம்பி மோசம் போய்விட்டோமே. ஐயையோ! என் வயிறு கொதிக் கின்றதே. வந்தவன் வேறு மனிதன் போல வேஷம் போட் டுக்கொண்டு வந்து அடியோடு மோசம் செய்துவிட்டானே! என்ன செய்வேன்? என்னுயிரைப் பிரித்துவிட்ட பாதகனை நான் வெட்டி வீழ்த்திச் சித்திரவதை செய்தாலும் என் மனக்கொதிப்பு அடங்காதே. என்ன அநியாயம்! என்ன விபரீதம்! ஐயோ! என் காந்தாமணி! கண்மணி! இனி நான் என்ன செய்வேன்?" என்று ப்ரலாபித்துக் கதறுகின்றார்கள். இதற்குள்ளாக அருகிலிருக் கும் பங்களாவிலுள்ள பிரபுக்கள் இங்கு வந்து முதலியாரைத் தேற்றி "மேலே கவனிக்கவேண்டிய காரியங்களை விட்டுவிட்டுப் புலம்

பினால் என்ன செய்வது? உடனே போலீஸாருக்கு டெலிபோன் செய்யுங்கள் அல்லது நாங்கள் செய்கிறோம்." என்று கூறினார்கள்.

பிறகு முதலியார் விசனத்தோடு பேசத்தொடங்கி "ஐயோ! எனக்கு இப்பொழுது ஒன்றுமே தெரியவில்லை. நீங்களே டெலிபோன் மூலமாய் போலீஸாருக்குத் தெரிவியுங்கள்." என்று பரிதாபகரமாகக் கூறினார். உடனே வந்தவர்களில் ஒருவர் டெலிபோன் மூலமாய்ப் போலீஸாருக்குச் செய்தி தெரிவித்தார். போலீஸார் உடனே வருவதாகவும் பதில் தெரிவித்துவிட்டார்கள். பிறகு எல்லோரும் குழம்பித் தவித்துக்கொண்டிருக்கையில் போலீஸ்காரர்கள் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். போலீஸாரைக்கண்ட எல்லோரும் எழுந்து விலகிக் கொண்டார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் ஹெட்கானிஸ்டேபிள் முதலிய எல்லோரும் காந்தாமணியின் அறைக்கு வந்து சேர்ந்தார்கள். இன்ஸ்பெக்டர் முதலியாரைப் பார்த்து "என்ன சமாச்சாரம்! என்ன நடந்தது? இங்கு ஏன் இத்தனை கூட்டம்?" என்று கேட்டார்.

இதைக்கேட்ட முதலியார் வருத்தப்பட்டுக்கொண்டே "ஐயா! நான் இரவு 8-மணிக்கு மேல் வீட்டைவிட்டு சர்கஸ் பார்க்கச் சென்றுவிட்டேன். அங்கு எனக்கு ஆள் வந்தது. உடனே நான் வந்து சேர்ந்தேன். இங்கு நடந்த வரலாற்றை இதோ இவன் கூறுவான்" என்று பச்சையைக் காட்டி அவனை நடந்த வரலாற்றைக் கூறும்படி உத்தரவிட்டார். உடனே போலீஸார், "இந்த அறையில்தான் கொலை நடந்ததோ? இதனை அப்படியே வைத்திருக்கிறீர்களா? அல்லது யாரேனும் ஏதேனும் சோதனை செய்தீர்களா?" என்றார்.

முதலியார், "இந்த அறையில் யாரும் எதுவும் செய்யவில்லை. அப்படியேதானிருக்கிறது" என்றார். பிறகு பச்சையின் வாக்குமூலத்தைக் கேட்டார்கள். பச்சை பயந்துகொண்டே முதலியாரிடத்தில் கூறியதை மீண்டும் கூறினான். (தெரிந்த விஷயமாகையால் ஈண்டு வரையவில்லை.)

இன்ஸ்பெக்டர் பச்சையின் காலில் துப்பாக்கியால் சுடப்பட்ட காயத்தைப் பார்த்துவிட்டு அங்கே கீழே விழுந்திருக்கும் துப்பாக்கியின் குண்டை எடுத்துக்கொண்டு முதலியாரைப் பார்த்து

182836

"ஐயா! அந்த செல்லப்பாவென்பவன் உங்களுக்கு எத்தனை நாளாகப் பரிச்சயமுள்ளவன்? அவனுக்கும் உங்களுக்கும் எவ்வாறு சம்பந்த மேற்பட்டது? பிறகு மனஸ்தாபம் ஏதேனும் உண்டா? அவன் உங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவதுண்டா? அவனுடைய வரலாறு யாது? வயதென்ன?" என்று கேட்டார்.

முதலியார், "அவனும் என் புதல்வியும் ராஜதானிக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தார்கள். அங்குதான் பழக்கமேற்பட்டது. அவன்மீது என் குழந்தை மிகவும் பக்ஷம் வைத்து அவனை வெகு பிரியத்தோடு சிநேகித்து வந்தாள். அவன் மேனாட்டு நாகரிகத்தில் பிரியப்பட்டு அவ்வாறே நடந்து வருகிறானாகையால் அவனுடைய பெற்றோர்கள் புராதன கொள்கையையே முற்றும் கைப்பற்றியவர்களாகையினால் அவர்களுக்கு இவனிடத்தில் வெறுப்புண்டானதாகவும், தன்னையும் அவர்களைப்போலவே இருக்கும்படிக்குக் கூறிக் கடிந்துகொண்டதாகவும் தனக்கு அம்மாதிரி இருப்பதில் பிரியமில்லாமையால் அவன் அவர்களைத் துவேஷித்துக்கொண்டிருப்பதாகவும் கூறினான். அதுதான் எங்களுக்குத் தெரியும். அவன் எங்கள் வீட்டிலேயே எங்களுடன்கூடப் பழகி இங்கேயே இருந்துவிட்டான். அவன் இங்கு இருந்தவரையில் மிகவும் நாணயமாகவும் நன்னடக்கை யுள்ளவனாகவுமிருந்தான். எங்களுக்கும் அவனிடத்தில் பிரியமே ஏற்பட்டிருந்தபடியால் நாங்கள் அவனை ஒரு விதத்திலும் சந்தேகியாமல் தாராளமாகப் பழகி வந்தோம். சில நாளைக்குமுன் அவனைப்பற்றி அவதூறாகவும் அவன் நடத்தையைக் குறித்து கண்டபடி தூஷித்தும் எனக்கும் என் குமாரத்திக்கும் விவரமாக இருகடிதங்கள் கையொப்பமின்றி வந்தன. அது முதல் எனக்கு மாத்திரம் அவனிடம் சற்று மனம் மாறுபட்டது. என் புதல்வி அவனைச் சற்றும் வெறுக்காமல் நேசித்தே வந்தாள். இப்போது சமீபத்தில் அவன் தாசி நீலாமணி என்பவள் வீட்டில் நகைகளைத் திருடியதாகக் குற்றத்திற் குட்பட்டு சிறையில் இருப்பதாகப் பத்திரிகையில் படித்தேன். அவன்சிறையிலிருந்து என் குழந்தைக்கு ஒரு கடிதம் எழுதிப் போலீஸார் மூலமே அனுப்பினனும். அதற்கு என்பெண் அவனுக்கு உதவிபுரிய முடியாதென்று மறுத்து கண்டிப்பாக பதில் எழுதிவிட்டாளாம். பிறகு அவனுக்கும் எங்

களுக்கும் சம்பந்தமே அற்றுவிட்டது. அவனுடைய பெற்றோரை எங்களுக்கு இதுவரையில் தெரியாது. என் குமாரத்தி நேற்றுக் கடற்கரைக்குச் சென்றிருந்த காலத்தில் அந்தத் திருடன் அங்கு வந்து என் குழந்தையைச் சந்தித்துத் தன்னைக் கைவிடலாகாதென்றும் முன்போலவே நேசிக்கவேண்டுமென்றும் கூறிக் கெஞ்சினனும். என் பெண் அதைச் செவியில் வாங்காமல் அலக்ஷியமாகவும், அவனுக்குப் பதில் கூருமலும் வந்துவிட்டாளாம். இந்தச் செய்தியை என்னிடம் இரவு தெரிவித்தாள். நான் இனிமேல் அவனைச் சந்திக்காதே என்று கூறினேன். அவளுக்குத் தலைவலி. சர்க்கஸ் பார்க்க வரவில்லை என்று கூறிவிட்டாள். அதனுல் நான் சென்றுவிட்டேன். பிறகு ஆள் வந்து என்னை யழைத்தான். நான் வந்து சேர்ந்தேன். அவனுக்கு இருபது வயதிருக்கும். இவ்வளவு தான் எனக்கு அவனைப் பற்றித் தெரியும்'' என்று கூறினர்.

இதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் ''தாசி நீலாமணியின் வீட்டில் களவாடி சிறையிலிருந்து ஜாமீனில் சென்றவன்தானு? சரிதான். செல்லப்பா என்பவன் வேறொருவனுய் இருக்கக் கூடும் என்று எண்ணினேன். அவன் களவாடியதை நானறிவேன். சரி. இந்த அறையைச் சோதனை செய்யவேண்டும். எல்லோரும் விலகிக் கொள்ளுங்கள்'' என்ருர். உடனே எல்லோரும் விலகிக்கொண்டார்கள். இன்ஸ்பெக்டரும் சேவகனும் அந்த அறையைச் சோதனை செய்யத் தொடங்கினர்கள். கட்டிலின் மீது ஒரு சவுக்கம் ரத்தக் கறையுடன் இருக்கக் கண்டு அதையெடுத்துப் பார்த்தார்கள். அதன் தலைப்பு நுனியில் செல்லப்பாவின் இனிஷியல் காணப்பட்டது. அதை முதலியாரிடம் காட்டி ''இந்த இனிஷியல் யாருடையது?'' என்று கேட்டார்கள். இதைக் கேட்ட முதலியார் ''இது அந்தப் பாவியினுடையது தான்'' என்ருர். அதைக் குறித்து எடுத்துக்கொண்டு மீண்டும் ஆராயலானர்கள். கனகாம்பர புஷ்பமும் ரோஜா புஷ்பமும் தாறுமாருக இரைந்துக் கிடப்பதைப் பார்த்து ''உங்கள் புதல்வி நேற்று இந்தப் புஷ்பம் சூட்டியிருந்ததாக அறிகிறோம்.'' என்ருர்கள். அங்கிருந்த வேலைக்காரனில் ஒருவன் ''நேற்று அம்மாவுக்கு இந்தப் புஷ்பத்தை நான்தான் பறித்துக் கட்டிக் கொடுத்தேன்; அதை அழகாகச் சூட்டியிருந்தார்கள்'' என்ருன். அதையும் போலீ

ஸார் குறித்துக் கொண்டு சிதறிக் கிடந்த புஷ்பத்தில் சிறிது எடுத்துக் கொண்டார்கள். பின்னும் பார்த்துக்கொண்டே வருகையில் முத்துச்சாமி எழுதி எறிந்திருந்த துண்டுக் காகிதச் சுருள் இவர்கள் கையில் கிடைத்தது. அதை எடுத்துப் படித்தார்கள்.

"ஆ! அம்மா! அப்பா! தப்பவழியில்லை. கொலைபாதகன் செல்லப்பா என்னைக் கொலை செய்ய"

என்றுமொட்டையாக எழுதியிருப்பதைப் படித்ததும் போலீஸாரும் வியந்து "இந்த எழுத்து யாருடையது பாருங்கள்" என்றுமுதலியாருக்குக் காட்டினார்கள். அவர் அக்கடிதத்தைப் பார்த்து "ஆ! இது என்னுடைய காந்தாமணியின் எழுத்துப் போலவே இருக்கின்றதே! ஐயோ! இதை அவள் அவசரத்தில் கிறுக்கியிருப்பதாகத்தெரிகின்றது. மொட்டையாக நிறுத்தியிருப்பதைக் கவனித்தால் இதை யவனுக்குத் தெரியாமல் எழுத ஆரம்பித்திருக்க வேண்டும். அது முடிவு பெறுவதற்குள் அந்தச் சண்டாளன் வந்துவிட்டான் போலத் தோன்றுகின்றது. ஆகையால் அதை அந்த மட்டும் சுருட்டி எறிந்திருக்கின்றாள் போலவிருக்கிறது. இந்தக் கடிதத்தை அவள் எழுதின சொற்ப அவகாசத்தில் அப்பாவி என்ன செய்து கொண்டிருந்தானோ? என் கண்ணே! காந்தா! ஐயோ! உன் கைப்படவே உன்னுயிர் போகப் போவதாக எழுதிவிட்டாயே! ஐயோ! மீண்டும் உன்னை எப்போது காண்பேன்?" என்று கண்ணீர் விட்டார். இதற்குள் பக்கத்திலிருப்பவர்கள் முதலியாரைத் தேற்றினார்கள். போலீஸார் அந்தக் கடிதத்தை எடுத்து வைத்துக்கொண்டு மீண்டும் சுற்றிப் பார்த்தார்கள். வேறு எதுவும் காணப்படவில்லை. பிறகு போலீஸார் அந்த பங்களாவின் மற்ற வேலைக்காரர்களைப் பார்த்து, "நீங்களெல்லோரும் படுத்திருந்தபோது துப்பாக்கியின் வெடிச்சத்தம் உங்களுக்குக் கேட்கவில்லையா? அதைக் கவனிக்காமலா எல்லோரும் நித்திரை செய்தீர்கள்?" என்று கேட்டார்கள். இதைக் கேட்ட வேலைக்காரர்கள் பயந்து நடு நடுங்கியவாறு, "சாமீ! எஜமானே! இங்குப் பக்கத்திலுள்ள அம்மன் கோயிலில் இப்போது திருவிழா நடக்கின்றது. அதற்கு அதிர்வெடியும் அவுட்டும் அடிக்கடி போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். நாங்கள் அலுத்துப் படுத்ததனால் அயர்ந்து தூங்கி விட்டோம். தூரத்தில் வெடிச்சத்தம் கேட்டுக் கண் விழித்துக்

கொண்டோம். ஆதை நாங்கள் துப்பாக்கி என்று எவ்வாறறிவது? அவுட்டு என்று எண்ணியே மீண்டும் படுத்துவிட்டோம். அதோடு காற்றும் மும்முரமாய் அடித்ததனால் கதவுகள் பட்டீர் பட்டீர் என்று அடித்துக் கொண்டன. அந்த இரண்டில் ஒன்று என்று எண்ணி நாங்கள் மீண்டும் தூங்கிவிட்டோம். பிறகு பச்சை கத்தியது எங்களுக்குக் கனவு காண்பது போலத் தோன்றிற்று. இருந்தாலும் நாங்கள் மெல்லக் கண்ணை விழித்துக்கொண்டு ஆடி விழுந்துகொண்டு பச்சையின் குரல் கேட்டதால் அவன் மெத்தையில்தான் படுக்கிற வழக்கம் என்று எண்ணி மெத்தைக்குப் போனோம். அங்குப் போன பிறகே எங்களுக்கு நடந்த செய்தி தெரிந்தது. உடனே ஓடினோம்; தேடினோம். எங்கும் அவனைக் காணவில்லை. பிறகு எஜமானுக்கு ஆளையனுப்பி அழைத்து வந்தோம். மேல் நடந்ததுதான் நீங்களறிந்த விஷயம்" என்றார்கள்.

போலீஸார்:—துப்பாக்கிச் சத்தத்திற்கும் அதிர்வெடி, அவுட் முதலிய சத்தத்திற்கும் வித்தியாசம் உங்களில் ஒருவருக்காவது தெரியவில்லையா?

வேலைக்காரர்கள்:—தூக்கக் கலவரத்தில் எங்களுக்கு வித்தியாசமே தெரியவில்லை.

போலீஸார்:—துப்பாக்கியின் வெடி வீட்டிலிருந்து கேட்பதற்குக்கூட உங்களுக்குச் சப்தத்தின் நிதானம் தெரியவில்லையா?

வேலைக்காரர்கள்:—நாங்கள் எல்லோரும் கீழே படுத்துக் கொள்கிற வழக்கம். அவுட்டு ஆகாயத்திலிருந்து வெடிப்பதால் அதுவும் உயரவிருந்தே சத்தம் கேட்கிறது. அதைப்போல் துப்பாக்கியும் உயர மாடியிலிருந்து கேட்டதனாலும் அநேக கதவுகள் சாத்தியிருப்பதனாலும் எங்களுக்குத் தூக்கத்தின் கலவரத்தில் நிதானம் தெரியவில்லை. தெரிந்திருந்தால் நாங்கள் சும்மாவிருப்போமா?

போலீஸார்:—நீங்கள் தினம் எத்தனை மணிக்குத் தூங்குவது வழக்கம்?

வேலைக்காரர்கள்:—நாங்கள் எஜமானர் தூங்கியபிறகு தூங்குவோம். நேற்று எஜமான் வீட்டிலில்லாமையால் நாங்கள் சீக்கிரம் தூங்கி விட்டோம்.

போலீஸார்:—உங்கள் சின்ன எஜமானியம்மாள் எத்தனைநேரம் பேசினார்கள்? என்ன பேசினார்கள்? பேசிய சப்தம் உங்களில் யாருக்கேனும் கேட்டதா? பேசிய மாதிரியில் சண்டைசெய்து பேசியதாகவாவது, அல்லது சாதாரணமாகப் பேசியதாகவாவது உங்களில் யாருக்கேனும் தெரிந்ததா சொல்லுங்கள்.

வேலைக்காரர்கள்:—(பச்சையைக் காட்டி) இவன்தான் இங்கு மாடியில் படுத்துக்கொள்வது வழக்கம். நாங்கள் கீழே இருந்ததால் எங்களுக்கு எதுவும் தெரியாது.

பச்சை:—ஐயா! அந்தப் பாதகன் வருகிறான் என்பதையறியாமல் யாரோ வந்திருப்பதாகவே அம்மாள் நினைத்திருந்ததாக நான் அவர்கள் பேசியதிலிருந்து தெரிந்துகொண்டேன். அந்தச் சண்டாளனை அம்மாளே நேரில் வந்து என்னவோ இங்கிலீஷில் பேசியபடியே அவன் கையைக் குலுக்கி அழைத்துக்கொண்டு போனார்கள். நான் அதைப் பார்த்தேன். பிறகு நான் சற்றுநேரம் கழிந்து மெத்தைக்குச் சென்றுப் படுத்துக்கொண்டேன். அப்போது நான் செல்கையில் அந்த அறையின் ஜன்னல் வழியாகப் பார்த்தேன். இருவரும் சோபாவில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தப் பேச்சு இங்லீஷாகையால் எனக்குப் புரியவில்லை. யாரோ வேண்டியவர்களோடு பேசுகிறார்கள் என்று எண்ணி நான் போய்ப் படுத்துவிட்டேன். பிறகு எனக்கு நல்ல தூக்கத்தில் கூச்சல் கேட்டு எழுந்து சென்றேன். வாசற்படியண்டை வரும்போதே காலை ஒடித்துவிட்டான். உடனே வலியினால் நான் பிரக்ஞையற்று விழுந்துவிட்டேன். நான் தெளிந்து கண்ணை விழித்துப் பார்த்தபோதுதான் அவன் அம்மாள் கழுத்தை அழுத்திக்கொண்டே

"மாறுவேஷத்துடன் வந்த செல்லப்பாவை யாரோவென்று எண்ணி உள்ளே விட்டு ஏமாந்தாயே. செல்லப்பாவின் சாமர்த்தியத்தைப் பார்த்தாயா? காந்தாமணியின் சவத்தையும் இங்கு விடாமல் மீன் முதலிய ஜந்துக்களுக்கு இரையாகக் கடலில் கொண்டு எறிந்துவிடுகிறேன்."

என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான். நான் கத்திக் கூச்சலிட்டு இவர்கள் எழுந்து வருவதற்குள் அந்த மாயக் கள்ளன் மறைந்துவிட்டானே! வேறு எதுவும் எனக்குத் தெரியாது.

போலீஸார்:—(இவர்கள் கூறியதை எல்லாம் குறித்துக்கொண்டு முதலியாரைப் பார்த்து) தங்களிடம் தங்கள் குழந்தை கடற்கரையில் செல்லப்பாவைச் சந்தித்தாகச் சொல்லியபோது அவளிடம் தங்களுக்கு ஏதேனும் சந்தேகமோ, வார்த்தையில் பேதமோ தெரிந்ததா?

முதலியார்:—எனக்கு எதுவும் விகற்பமாகத் தெரியவில்லை. ஆனால் அவனிடத்தில் இன்னும் அவளுக்குப் பற்று இருப்பதாக மாத்திரம் நான் கண்டுகொண்டேன். அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் அவளுக்கு அவனை மறக்கும்படியாகப் புத்திமதி கூறி விட்டு நான் சென்றேன். அவள் சொல்லியதில் அவன் குரூரமாகப் பேசியதாக எதுவும் சொல்லவில்லை. மிகவும் கெஞ்சிப் பேசியதாகவே தெரிவித்தாள்.

போலீஸார்:—கடற்கரையில் சந்தித்த பிறகு அவன் இங்கு வரப்போவது உங்கள் குழந்தைக்குத் தெரிந்திருக்குமா?

முதலியார்:—அதைப்பற்றி அவள் என்னிடம் எதுவுமே சொல்லவில்லை.

போலீஸார்:—நீங்கள் வேடிக்கை பார்க்கச் சென்றால் உங்கள் குழந்தை எப்போதும் கூட வரும் வழக்கமில்லையா?

முதலியார்:—சில தினம் வருவதுண்டு. சில தினம் பரீக்ஷை, தேக அசௌக்யம் முதலியவை இருந்தால் வருகிற வழக்கமில்லை. அவ்வாறே நேற்றுத் தலைவலி என்று கூறியதால் நான் அவளைப் பலவந்திக்காமல் சென்றுவிட்டேன்.

போலீஸார்:—வேறு இங்கு விசாரிக்க வேண்டிய சாக்ஷி யாரேனுமுண்டோ?

முதலியார்:—வேறு யாருமில்லை. என் குமாஸ்தா ஊரிலே இல்லை. மற்றவர்கள் இவ்வளவுதான்.

போலீஸார்:—செல்லப்பாவின் பங்களா இங்கு யாருக்கேனும் தெரியுமா?

முதலியார்:—எங்களில் யாருக்கும் தெரியாது. மேலும் அவன் அவர்களுடைய வீட்டிற்குப் போகவில்லை என்றும் அவனுடைய நண்பன் ரத்னசாமி என்பவனின் வீட்டில் இருப்பதாகவும் என்னு

டைய குமாஸ்தா கூறக் கேட்டேன். குமாஸ்தாவிற்கு அவனுடைய வீடு தெரியும். குமாஸ்தா ஊரிலிருந்து இன்று ராத்திரி வருவதாகக் கூறினார். வந்துவிட்டாரா பார்த்துவரச் சொல்கிறேன்—என்று கூறியவாறு "அடே முனியாண்டி! வண்டியோட்டிக்கொண்டு குமாஸ்தாவின் வீட்டிற்குச்சென்று அவர் வந்துவிட்டாரா பார்த்து அழைத்துக்கொண்டு வா" என்றார்.

உடனே முனியாண்டி மோட்டாரைப் போட்டுக்கொண்டு குமாஸ்தா வீட்டிற்குச் சென்று விசாரிக்க குமாஸ்தா வந்து விட்டதாகத் தெரிந்தது. உடனே அவன் குமாஸ்தாவை எழுப்பி நடந்த விஷயத்தைத் தெரிவித்தான். குமாஸ்தா இந்தச் செய்தியைக் கேட்டதும் அலறித் துடித்துக் கதறினார். பிறகு முனியாண்டி அவரை அழைத்துக்கொண்டு பங்களாவிற்கு வந்து சேர்ந்தான்.

போலீஸார்:—(குமாஸ்தாவை நோக்கி) உமக்கு ரத்னசாமி வீடு தெரியுமா?

குமாஸ்தா:—தெரியும். அந்தப் பாவி அங்கு இருக்கின்றான் என்பது என்ன நிச்சயம்?

போலீஸார்:—அவன் வழக்கமாக இருக்கக்கூடிய இடத்தையெல்லாம்பார்த்துவிட்டு அங்கெல்லாம் இல்லாவிட்டால்நாலாபக்கமுமுள்ள போலீசுக்குத் தெரிவித்துத் தேடுவோம். அவன் வீட்டைக்காட்டும்—என்று கூறிவிட்டுத் தாங்கள் அந்த அறையின் அடையாளங்களையும் அங்குள்ள சாமான்களின் எண்ணிக்கையையும், தாங்கள் கண்டெடுத்த கடிதம், புஷ்பம், துப்பாக்கியின் குண்டு, சவுக்கம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு முதலியாருக்கு அநேக தேறுதல்கள் கூறித் தாம் எவ்விதமேனும் குற்றவாளியைக் கண்டு பிடிப்பதாகக் கூறிவிட்டுக் காந்தாமணி, செல்லப்பா ஆகிய இருவருடைய புகைப் படங்களையும் வாங்கிக்கொண்டார்கள். பச்சையை ஒரு வண்டியிலேற்றிப் போலீஸ் சேவகனுடன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார்கள். செல்லப்பா சவத்தைக் கடலில் எறிந்துவிடுவதாகக் கூறியதைப் பச்சை கேட்டதாகச் சொன்னானல்லவா? அதற்காக அங்குச் சில ஆட்களையனுப்பிச் சவத்தைத் தேடும்படியாக போலீஸார் ஸ்டேஷனுக்கு ஓர் ஆணையனுப்பித் தெரிவித்தார்கள். இதற்குள் நன்றாகப் பொழுது விடிந்து சூரியனும் கிளம்பிவிட்டான். குமாஸ்தா,

போலீஸார் ஆகிய எல்லோரும் நேரே ரத்னசாமி வீட்டை அடைந்தார்கள்.

அந்தோ! முன் அதிகாரத்தில் சொல்லியபடி காந்தாமணியின் கைக் குட்டையை வைத்துக்கொண்டு செல்லப்பா வருந்தியிருந்த தருணம் போலீஸார் அவனைப் பிடித்துக்கொண்டார்கள். குமாஸ்தா "இந்தக் கைக் குட்டை தான் சென்றவாரம் நானும் எங்கம்மாளும் பட்டணத்திலிருக்கும் பெரியஸில்க் ஷாப்பில் வாங்கிக்கொண்டு வந்தோம். இதையும் வைத்துக்கொண்டு மாமாலம் செய்து அழுவதைப் பாருங்கள்" என்று ஆத்திரத்தோடு கூறினன்.

இதைக் கேட்ட செல்லப்பா தகவல் இன்னதென்று தெரியாமல் விழிக்கின்றான். தான் ஒரு பாபமும் அறியாமலிருக்கும்போது தனக்கு வருவதெல்லாம் ஆபத்தாகவே யிருப்பதை யெண்ணிக் கலங்குகிறான். காந்தாமணியின் வீட்டுக் குமாஸ்தாவை அவன் நன்கறிவானகையால் அவன் "இந்தச் சண்டாளந்தான் கொலை பாதகன்" என்று கூவுவதால் அவ்விடத்தில் ஏதோபெரிய விபரீதம் நடந்திருக்க வேண்டும் என்று நினைப்பதற்குள், "காந்தாமணியைக் கொலை செய்துவிட்டு அதோ அவளுடைய கைக் குட்டையை வைத்துக்கொண்டிருப்பதைப் பாருங்கள்" என்ற சொல் அவன் காதில் விழுந்தது. அவன் உடனே உயிரற்ற உடல்போல் விழுந்து " ஆ !" என்று துடி துடித்தான். "ஐயோ! எந்தப் பாவி என் கண்மணியைக் கொலை செய்துவிட்டானே தெரியவில்லையே! ஐயோ! கஷ்டகாலமே, அதுவும் என் தலையிலா விடிய வேண்டும்! ஆ! இதை என்னால் சகிக்கக் கூடவில்லையே. என்னை அவள் காலின் செருப்பாலடித்தாலும் நான் அவளுக்குப் பதிலுக்கு எவ்விதத் தீங்கும் என் மனதால் கூட நினைக்கமாட்டேனே! ஐயோ! ஆ! இதென்ன கொடுமை! ஒன்றன் பின்னொன்றாக இவ்வித ஆபத்தா வரவேண்டும்........என்னைக் கொலை செய்தாலும் நான் உட்படத்தயாராயிருக்கிறேன். என் கண்மணியை, ஐயோ! என் காந்தாமணியை, ஆ! ஆ! எந்தக் கிராதகன் கொன்றுவிட்டானோ தெரியவில்லையே!" என்று தனக்குள்ளாக துடித்துக் கதறிப் பாகா யுருகுகின்றான். இதற்குள் போலீஸ் சேவகன் அதட்டிய குரலால் "எழுந்திருய்யா! செய்ததையும் செய்துவிட்டு மிக்க சாதுவைப் போல் பாசாங்கு செய்கிறாய்; எழுந்திரு"

என்று அதட்டினான். இதைக் கேட்ட செல்லப்பா நெருப்பில விழுந்த புழுவாகத் தவித்தான். என்ன பதில் சொல்வது என்பதை யறியாமல் தத்தளித்தான். அவன் தேகம் முழுதும் கட்டுமீறித் துடித்தது. கண்ணில் நீர் தாரை தாரையாகப் பெருகியது. ஏற்கெனவே நொந்து மெலிந்து கிடக்கும் அவன் மனம் நிலையற்று அலைகடல் துரும்பென அலைந்தது. அவன் அப்போது ஒரு சவம் போல் காணப்பட்டானே யன்றி உயிருள்ள மனிதனாகவே காணப் படவில்லை. அவனைப் போலீஸார் எழுந்து நிற்கச் சொல்லியதும் அவனுக்குத் தெரியவில்லை. கையைப் பிடித்து போலீஸாரே செல்லப்பாவை இழுத்து நிற்கவைத்தார்கள், எழுந்து நின்ற செல்லப்பா, பதறிய மனத்தோடு பேசத் தொடங்கி, "ஐயா! எதற்கு என்னை இவ்விதம் பீடிக்கின்றீர்கள்? என்ன காரணத்தினால் என்னைக் கைது செய்கிறீர்கள்? எனக்கு விவரமே தெரியவில்லையே. காரணத்தைச் சொல்லிப் பின்னால் உங்கள் வேலையைச் செய்யுங்களேன்" என்று வணக்கமாகக் கூறினான்.

இதைக் கேட்ட போலீஸார் "ஐயா! நீ கட்டுக்கதை கட்டுவதில் மெத்த சமர்த்தனென்பதைத் தாசி நீலாமணி வீட்டில் திருடிய போதே தெரிந்துகொண்டோம். இந்தக் கட்டுக்கதையை எல்லாம் நாங்கள் கேட்கத் தயாராயிருக்கவில்லை. நீ அந்தக் காந்தாமணியைக் கொலை செய்ததற்கு உன் வாயின் கொழுப்பினாலேயே அகப்பட்டுக் கொண்டாய். நீ பச்சையின் காலில் சுட்டதுமின்றி அவனெதிரிலேயே 'செல்லப்பாவின் சாமர்த்தியத்தைப் பார்' என்று சொல்லி வந்ததே போதுமான சாக்ஷி. அதோடுமில்லாமல் இதோ காந்தாமணி கைப்பட எழுதிவைத்த கடிதத்தைப் பார். இன்னும் என்ன யோசனை? காந்தாமணியை எங்கு வைத்திருக்கிறாய்? என்ன செய்தாய்? முன் போலல்லாமல் உண்மையைத் தெரிவித்தால் உபத்திரவமில்லை. நீ போலீஸின் மாதிரியையும், சிறைவாச மகிமையையும் கண்டறிந்தவனாகையால் யோசனையின்றிக் கூறிவிடு" என்று அதட்டினார்கள். இதைக் கேட்ட செல்லப்பா இடிந்துபோய்த் தாங்கொணாத வேதனையுடன் "ஆ! நானா காந்தாமணியைக் கொன்றேன்! பச்சையைச் சுட்டேன்! ஐயோ! தலைவிதியே! என்னுருயிர்க் காந்தாமணியை யார் கொலை செய்துவிட்டார்கள்? ஐயோ! காந்

தாமணி! நான் நேற்று அந்தப் பங்களாவிற்கே செல்லவில்லையே! இரவு முற்றும் நித்திரையின்றி இங்கேயே நான் தவித்ததை இங்குள்ளோர் அறிவார்களே! எனக்கு ஒருபாவமும் தெரியாதே" என்று கதறுகிறான்.

இதற்குள் வெளியில் சென்றிருந்த ரத்னசாமி அங்கு வந்தான். அங்கு போலீஸாரும், இன்னும்மற்ற பேரும் கூடியிருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போய் என்னவென்று அவன் விசாரித்தான். செய்தியை இன்னதென்று அறிந்துகொண்டதும் அவன் கொதித்த மனத்தோடு "இதென்ன அநியாயமாயிருக்கின்றதே! இந்த வீட்டை விட்டுச் செல்லப்பா ராத்திரி எங்கும் செல்லவில்லையே! அப்படியிருக்க அவன்மீது பழி சுமத்துவது போலீசின் முறைமையோ? அவனும் நானும் இரவு வெகுநேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு நித்திரை செய்தோம். காலையில் இருவரும் ஒன்றாகவே எழுந்தோம். ஏன் இந்த விபரீதச் செய்தியை அபாண்டமாக இந்த நிரபராதியின்மீது சுமத்துகின்றீர்கள்?" என்று ஆவேசத்துடன் கூறினான். இதைக் கேட்ட போலீஸார் கடுங்கோபத்துடன் பேசத்தொடங்கி, "ஐயா! பேசாமலிரு. திருடனுக்குத் தோழன் பெரிய திருடனாகத்தான் இருக்கவேண்டும். அவன் தாசி நீலாமணியின் வீட்டில் களவாடியதைக் கையும் மெய்யுமாய்ப் பார்த்துப் பிடித்தோமே. அக் கள்ளனின் தோழனைகையால் நீ மிகவும் பரிந்து பேசுகின்றாயா? போய்யா போ. உன்னை யார் கேட்டது? எங்களுக்கு முக்கியமான சாக்ஷிகள் அவனுடைய கொழுப்பினாலேயே கிடைத்திருக்கும்போது இதில் சந்தேகம் வேறுமுண்டோ? இவனுக்கு உதவி புரிய வராமல் மறுத்து அலக்ஷியமாகக் காந்தாமணி கடிதம் எழுதி யனுப்பியதன் க்ஷாத்திரத்தினால் அவளைக் கொலை செய்தான் என்பது நன்றாக விளங்கவில்லையா? இதைவிட இன்னும் வேறு என்ன வேண்டும்" என்று கூறிச் செல்லப்பாவைப் பார்த்து, "அலக்ஷியமாகவும் அவமதிப்பாகவும் "என்னய்யா நிற்கின்றீர்? எங்கே சவத்தை ஒளித்துவைத்திருக்கிறீர்? சீக்கிரம் கூறும்" என்று அதட்டினார்கள்.

இதைக்கேட்ட செல்லப்பா சொல்லொணாத் துயரத்தில் மூழ்கிச் சோர்வடைந்தும் ப்ரமித்தும்போய் செயலற்று நிற்கிறான்; போலீஸார் கேட்பதற்குத் தான் என்ன பதில் சொல்வதென்று

தெரியாமல் தவிக்கின்றான். தான் நிரபராதியென்று சொல்வதை விட அவன் வேறு என்ன சொல்லக்கூடும்? அங்ஙனம் கூறின் அதையும் அவர்கள் கட்டுக்கதை என விளம்புகின்றனர். இந்தத் தர்ம சங்கடத்தில் பரிதபிக்கும் செல்லப்பா, மனந்தாங்காமல் பேசத் தொடங்கி, "ஐயோ! கால வித்தியாசமே! எனக்கு ஒரு பாபமும் தெரியாது. நான் எதையும் அறியாதவன்; நிரபராதி. வீணே என்னை வருத்தவேண்டாம். நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. தாசி வீட்டில் வந்த அபாண்டம் போதாதென்று இதையும் ஒன்று புனைத்துக் கொண்டு வந்தீர்கள்போலும். நான் என்னவோ சத்தியமாகக் குற்றமற்றவன். எந்தச் சண்டாளனின் கொடுமையினாலோ எனக்கு இத்தகைய படாப்பழி வந்து மூண்டிருக்கின்றது. என் கண்ணான கண்மணிக்குக் கெடுதல்செய்ய என் மனத்தினாற்கூட நான் நினைக்கவில்லை. எந்தக் கிராதகன் இதை மனம் துணிந்து செய்தானோ! அந்தப் பழியை என் தலைக்கு வெகு சாதுர்யமாய்க் கொண்டுவந்து விட்டீர்கள். என்ன விதமான பழிகள் என் மேல் சுமத்தி என்னைத் தூக்குத் தண்டனைக்கு உட்படுத்தியபோதிலும் நான் நிரபராதி யென்பது பொய்யாகாது. எனக்கு ஒரு பாபமும் தெரியாது. என்னை வீணே வருத்தாமல் உங்களிஷ்டம்போலக் கொன்றுவிடுங்கள். என் உயிர்நிலையாகிய காந்தாமணியைக் கொலை செய்த பாவி எவனோ அவனை நீங்கள் தண்டிக்காவிட்டாலும், பிறகு மேலிருப்பவன் பார்த்துக்கொள்வான். உங்களுடைய சாமர்த்தியத்தினால் என்னைப் பிடித்துத் தண்டித்துவிட்டதை எண்ணி அந்தப் பாதகன் தற்போது மகிழ்வடைந்திருந்தாலும் என்றும் அவ்வாறே சுகமடைந்து வாழ்வான் என்று எண்ணவேண்டாம், என்னைத் தூக்கிட்ட பின்னரேனும் உண்மையான தெய்வம் என்பது ஒன்று இருக்குமானால் அது அந்த குற்றவாளியைக் காண்பியாமலிராது. எனக்கு இவ்வுலகத்தில் மேன்மையாக விளங்கிய பொருளாகிய என் இன்பக் களஞ்சிய காந்தாமணியின் உயிர் நீங்கிய பிறகு நான் எதற்காக உலகத்தில் உயிருடன் இருப்பது? என்னையும் தாங்கள் குசாலாக உங்கள் தோரணைப்படி நடத்தலாம்" என்று கூறிக் கதறினான். "ஐயோ காந்தாமணி! என்னருமைக் காதலி! எனதாருயிர்க் கிள்ளையே! நீ கடற்கரையில் என்னை அவமதித்துத்

தள்ளியதைப் போலவே இவ்வுலகத்தையும் விட்டு இனி உன் முகத்தில் விழிப்பதில்லை என்று சென்றுவிட்டாயோ! ஆ! உன்னைக் கொலை செய்த அக்காலத்தில் உன்னுயிர் எவ்வாறு துடித்ததோ! எப்படி தவித்ததோ! பாவி என்மீது வந்திருக்கும் அபாண்டத்தை அப்போதும் நீ உண்மை என்று எண்ணி வெறுத்தாயோ! ஐயோ! என் கண்ணே! காந்தாமணி! என்னைத் தூக்கிலிட்ட பின்னர் நான் உன்னை அங்காகிலும் சந்திப்பேனே? அங்கும் என்னை வெறுத்து விடுவாயோ? என் காதற் கிள்ளையே! தெவிட்டாத செந்தேனே! என் செய்வேன்?'' என்று தனக்குள்ளாக நெருப்பின்மீது விழுந்த புழுவாய்த் துடிக்கின்றான். அவன் உயிர் அவன் தேகத்திலில்லாமல் பறக்கின்றது. அவன் துயரக் கடலில் மிதந்தபடி நிற்கின்றான்.

இவன் கூறியதைக் கேட்ட போலீசாரும் இன்னும் மற்றையோரும் ஏளனமாக நகைத்துக்கொண்டே "அடேயப்பா! என்ன மாமாலம் செய்கிறானய்யா! பலே. செய்யும் காரியத்திற்கு அனுகூலமாகச் சமயோசிதம்போலப் பேசவும் பழகியிருக்கின்றானயா. தான் தப்பித்துக் கொள்ளும்பொருட்டுக் கூறும் கதையெல்லாம் வெகு ஒழுங்காகத்தான் இருக்கிறது. அவைகளெல்லாம் இந்த இடத்தில் (போலீசாரிடத்தில்) செலாவணியாகுமா? உன் வேதாந்தம் இங்கு வேண்டாம். சவத்தை என்ன செய்தாய் என்பதைக் கூறுமய்யா!'' என்றார்கள்.

இதைக்கேட்ட செல்லப்பா ஆத்திரத்தோடு பேசத்தொடங்கி, "ஐயா! ராஜாங்கத்தார் அநியாயக்காரர்களைத் தண்டிப்பதற்கே போலீஸாரை நியமித்திருப்பதாக எண்ணியிருந்தேன். இப்போது என் விஷயத்தில் நியாயமாய்நடப்பவனுக்கும் தண்டனை செய்வதாக ஏற்படுகின்றது. என்னுடைய உண்மையான மொழிகளை எத்தனை தரம் கூறினாலும்அது கட்டுக்கதையாகவும் செலாவணியாகாமலும்தான் போகும். என்னை எத்தனை தரம் கேட்டாலும் நான் நிரபராதி என்பதைத் தவிர வேறு ஒன்றும் எனக்குச் சொல்லத் தெரியாது. ஏன் வீணே அலட்டிக் கொள்கிறீர்கள்?'' என்றான். இதற்குள் போலீஸார் கோபத்தோடு "உம். இப்படியெல்லாம் கேட்டால் நீ வழிக்கு வரமாட்டாய். உன்னை ஊர்வலம் அழைத்துச்சென்று மரியாதைகளோடு உண்மையை வரவழைக்கும் வழியில் வரவழைக்கின்றோம். எங்க

ளுக்கு அதற்கு வேண்டிய சாமர்த்தியம் உண்டு. உம். புறப்படு'' என்று அதட்டியவாறு செல்லப்பாவைக் கையைப் பிடித்திழுத்து நடத்தினார்கள். செல்லப்பா காந்தாமணியின் கைக்குட்டையை வைத்துக்கொண்டு கலங்கியவண்ணம் உட்கார்ந்திருந்த பலகையின்மீது ஒரு கைத்துப்பாக்கி துணியால் சிறிது மூடியதும் மூடாததுமாக வைத்திருந்ததை இன்ஸ்பெக்டர் கண்ணுற்று, "ஆ!" என்று ஆர்ப்பரித்துக்கொண்டே அந்தத் துப்பாக்கியை எடுத்து, "இதோ பச்சையின் காலில் சுட்ட துப்பாக்கி இதுவாகத்தா னிருக்கும்." என்று கூறிக்கொண்டு தான் காந்தாமணியின் வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு வந்த துப்பாக்கியின் குண்டை எடுத்து இந்தத் துப்பாக்கியில் போட்டுப் பார்த்தார். அந்தக் குண்டு அந்தத் துப்பாக்கியினுடையதாகவே இருக்கக் கண்டு வியந்து போலீசார் செல்லப்பாவை இன்னும் கண்டபடி ஏளனம் செய்து பேசத் தலைப்பட்டார்கள்.

போலீஸார் துப்பாக்கியைத் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எடுத்ததையும், குண்டு வைத்துப் பார்த்ததையும் கண்டவுடன் செல்லப்பாவுக்கு வியப்பும், வருத்தமும் ஒருங்கே பொங்கி எழுந்து அவனை வதைசெய்தன. அவன் மனக் கொதிப்புடன் பேசத் தொடங்கி, "ஐயோ! அநியாயமே! இந்த அக்ரமம் எங்கு நடக்கும்? இந்த அறையில் துப்பாக்கியையும் குண்டையும் உள் கையாகக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு என்னை இவ்விதம் ஏன் வதை செய்யவேண்டும்?'' என்று கூறிக்கொண்டே வருகையில் போலீஸார் இடைமறுத்து, "போதும் போதும்; வாயை மூடு. நீ செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் அடாவடி யடிப்பதோடு நில்லாமல் எங்கள்மீது அவதூறு பேசி அந்தக் குற்றத்திற்கும் ஆளாகின்றாயா? நட அய்யா! குற்றத்தை நீ ஒப்புக்கொள்ள மறுப்பதன் பயனாய் நீ செய்த கொலை பாதகம் நன்றாக ருஜுவாகின்றது'' என்று கூறியவாறு செல்லப்பாவை நோக்கி "நாங்கள் இந்த வீட்டைச் சோதனை செய்யவேண்டும். நீ உண்மையை உரைத்திடின் சோதனைவேண்டாம். சவத்தை என்ன செய்தாய்?'' என்று அதட்டினார்கள்.

இதைக்கேட்ட செல்லப்பா, "ஐயா! எனக்கு ஒன்றும் தெரியாது. என்னைத் துன்புறுத்த வேண்டாம். அன்னியர் வீட்டில்

நான் இருக்கின்றேன். அதைச் சோதனை போடுவது உங்கள் சட்டமாக இருந்தால் செய்யுங்கள். எனக்கு ஆக்ஷேபனை இல்லை. என் மடியில் கனமிருந்தாலன்றோ வழியில் பயமேற்படும். எனக்குப் பயமே இல்லை'' என்றான். உடனே போலீஸாரில் சிலர் ரத்னசாமியை அழைத்துக்கொண்டு அந்த வீட்டை முற்றும் சோதனை போட்டுப் பின் செல்லப்பாவை நடத்திக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடக்கலானார்கள். கண்ணீர் தாரைதாரையாகப் பெருகியவாறு செல்லப்பா துடித்த மனத்தோடு செல்கின்றான். துயரம் அதிகரிக்க அதிகரிக்க அவன் அவனுடைய பெற்றோரின்மீது கடுங்கோபம் கொண்டு அவர்கள் செய்த சதியாலோசனையின் அபிவிருத்தி தான் இந்தக் கொடுமை என்று எண்ணிப் பல்லைக் கடிக்கின்றான்.

எல்லோரும் இவ்வாறே நடந்து ஸ்டேஷனை யடைந்தார்கள். அவ்விடத்தில் சென்றபின்னர் போலீஸார் தங்கள் முறைப்படி உண்மையைக் கூறும்படியாகக் கேட்டும் செல்லப்பா ''எனக்கொன்றும் தெரியாது; நான் நிரபராதி.'' என்பதைத் தவிர வேறு ஒன்றும் கூறவில்லை. இவன் ஒரே உறுதியாகக் கூறியதனால் போலீஸாருக்கு அளவற்ற கோபம் உண்டாய்விட்டது. காந்தாமணியின் சவத்தை எங்கு என்ன செய்தாய் என்பதை பல விதத்தில் கேட்டுப் பார்த்தார்கள்; பின்னர் செல்லப்பாவை ஸ்டேஷன் அறையில் அடைத்து விட்டார்கள். அந்தோ! சிறையிலடைக்கப்பட்ட செல்லப்பாவின் உயிர் எவ்வாறு துடித்திருக்கும் என்பதை நாம் கூறவும்வேண்டுமா?

செல்லப்பா இப்படிப்பட்ட கதியை அடைந்ததைக்கண்ட ரத்னசாமி மனந் தாங்காமல் கலங்கிக் கண்ணீர் பெருக்கியவண்ணம் சற்று நேரங் கழித்துப் போலீஸ் அதிகாரியிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு செல்லப்பாவைக் கண்டு கோவெனக் கதறிப் புலம்பியவாறு, ''ஐயோ! செல்லப்பா! இதென்ன காலக்கொடுமையப்பா! இவ்வாறும் அநியாயம் நடக்குமோ! இதை யார் செய்துவிட்டு உன் தலைக்குத் தீம்பு வைத்திருப்பார்களென்று தோன்றுகிறது?'' என்று கேட்டான்.

தன்னை மறந்து கட்டுமீறிக் கண் கலங்கிக்கொண்டிருந்த செல்லப்பா ரத்னசாமி கூறியதைக் கேட்டு இன்னும் புலம்பியவனாய், ''ஐயோ! ரத்னசாமி! என் கதி என்னவாக ஆய்விட்டது பார்த்

தாயா! 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது பொய்த்துப்போய் அன்னை பிதாக்கள் ஆகாத சத்ருக்களாய் விட்டார்களே! அப்பா! ரத்னம்! உன்னிடம் ஒரு காரியம் சொல்கிறேன். அதைக் கவனித்துச் செய்ய வேண்டுகிறேன். ஒருகால் என் பெற்றோர்களே யாரேனும் ஆட்களைவிட்டுக் காந்தாமணியைக் கொலைசெய்து விட்டால் பிறகு நான் அவர்கள் வழியே திரும்பிவிடுவேன் என்று எண்ணிச் செய்திருந்தாலு மிருக்கலாம் என்றுதான் எனக்குச் சந்தேகமாக இருக்கின்றது. காந்தாமணியின் சவத்தைக் காணவில்லை என்று கூறுவதால் அவளைக் கொலை செய்தோ அல்லது செய்த பாவனையாக உயிருடனே மறைத்து வைத்திருந்தாலு மிருக்கலாம். எங்கள் பங்களாவில் பத்மவல்லியின் அறையிலுள்ள ரகஸிய அறையை முன் உனக்குக் காண்பித்திருக்கின்றேனே அது நினைவிலிருக்கலாம். இன்று இரவே யாருமறியாமல் அந்த ரகஸிய அறைக்குச் சென்று வெகு ஜாக்கிரதையாய்ப் பத்மத்தையும் அபகரித்துக்கொண்டோ அல்லது கொலை செய்துவிட்டோ என் வயிற்றெரிச்சல் தீர வந்துவிடு." என்று வெகு ரகஸியமாகவும் சுருக்கமாகவும் மெல்ல விஷயத்தைக் கூறி முடித்தான்.

அதைக்கேட்ட ரத்னசாமி அவ்வாறே செய்வதாகக் கூறிவிட்டு மீண்டும் சற்றுக் கண் கலங்கி வருந்தி, அவ்விடத்தை விட்டுச் சென்றான்.

## 10—வது அதிகாரம்

### கனவிலும் கருதாத கஷ்டம்

சைதாப்பேட்டை பங்களாவில் சுந்தரனுக்கு அதிக விமரிசையான விருந்து தயார் செய்து எல்லோரும் உண்டு தாம்பூலம் தரித்துக்கொண்டு சந்தோஷமாக இருக்கிறார்கள். அன்று பிற்பகல் போலீஸாரால் அனுப்பப்பட்ட ஒரு ஜெவான் அங்கு வந்து சேர்ந்தான். அதன் வருவதை முதலில் கண்ட அந்த பங்களாவின் குமாஸ்தா அப்படியே திடுக்கிட்டுப்போய் "ஐயோ! என்ன செய்தி கொண்டு வருகிறானோ! நன்மையோ தீமையோ தெரியவில்லையே!" என்று துடித்தவாறு அவனைக் கண்டு செய்தி என்னவென்று விசாரிக்கச் சேவகன் செல்லப்பாவின் செய்தியைக் கூறினான். இதைக் கேட்டதும் குமாஸ்தா தன்னை மீறி "ஆ!" என்று அலறித் துடித்தான்; உடனே தன்னைத் தான் தேற்றிக்கொண்டு நடந்த விஷயத்தை விவரமாகத் தெரிந்துகொண்டு பின் தனது எஜமானரிடம் தான் தெரிவிப்பதாகச் சொல்லிச் சேவகனை அனுப்பிவிட்டான்.

குமாஸ்தா இச்செய்தியை எவ்வாறு தனது எஜமானருக்குத் தெரிவிப்பதென்று வெகு நேரம் யோசித்துச்கொண்டே மிகவும் வருந்தியவாறு இருந்து "ஐயோ! செல்லப்பாவுக்கு முன்னால் ஏற்பட்ட திருட்டுக் குற்றத்தைக் கேட்டவுடனேயே யஜமானருடைய உயிர் நீங்கிவிடும் போலாய்விட்டதே. அதைவிட விபரீதமான இச்செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் அவர் உயிரே நீங்கிவிடுமே! என்ன செய்வேன்? குளத்தில் படர்ந்திருக்கும் பாசி சற்று விலகியிருப்பது போல அவருடைய துயரத்தையெல்லாம் விலக்கி டாக்டருக்கு விருந்து செய்து 'துன்பத்திலும் இன்பம்' என்கிறபடி இன்புற்றிருக்கும் சமயத்தில் இச்செய்தியை அவரிடம் எவ்வாறு அறிவிப்பது?" என்று குழம்பித் தவித்தான். "ஐயோ! இதென்ன அநியாய காலமாக வந்து மூண்டுவிட்டதே! இவ்வாறும் அக்கிரமம் நடக்குமோ! எந்தச் சண்டாளன் இவ்வாறு செய்துவிட்டு இவன் தலைக்குக் கல்லை வைத்துவிட்டானோ தெரியவில்லையே? ஏ! கருணாகரா! இந்த உத்தமர்களை நீ இவ்விதமும் பரிசோதிக்கலாகுமா!

இதுவுமுன் திருவிளையாடலோ!'' என்று கலங்கிக் கண்ணீர் விட்டான். "நாம் இச்செய்தியை எஜமானிடம் தெரிவித்தால் உடனே அவர் உயிர் போய்விடுமாயின் என் செய்வது? ஐயோ! கிஞ்சித் போகம் என்பது போலச் சற்று துயரத்தை மறந்த மனதை இச் செய்தி அடியோடு கலக்கிவிடும்போலிருக்கிறதே. இந்த தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வேன்?...................நாம் இச்செய்தியை அவரிடம் தெரிவித்துப் பின் நடக்கவேண்டியதைச் செய்வதை விட முன்னால் அதைச் செய்துகொண்டு தெரிவிப்பதே நலமாகத் தோன்றுகின்றது. அந்த சொற்ப நேரமாவது துயரற்று அவர் இருக்கட்டும்'' என்று பலமாதிரியாக யோசனை செய்து குழம்பிக் கொண்டேவெகு நேரம் இருந்துவிட்டுப் பிறகு "நேரே நமது துப்பறியும் நிபுணரான ராஜாராம் நாயுடுவைச் சந்தித்துச் செய்தியைக் கூறவேண்டும்'' என்று எண்ணித் திருவொற்றியூரை அடைந்து நாயுடுகாருவைக் கண்டு வணங்கி தேம்பித் தேம்பிக் கண்ணீர் விட்டான். இதைக்கண்ட நாயுடுகாரு "என்ன சமாச்சாரம்? ஏன் கண்ணீர்விடுகின்றாய்?'' என்று வெகு அனுதாபத்துடன் கேட்டார்.

இதைக் கேட்ட குமாஸ்தா சற்றுத் தெளிவடைந்து பேசத் தொடங்கி, "ஐயா! கலிகாலக் கடவுள் என்பது தாங்களேயன்றி வேறில்லை. இவ்வுலகத்தில் எத்தனையோ பெயர்களுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த உத்தம சீமான் தாங்கள் என்பதை இவ்வுலகம் அறியும். எங்கள் எஜமான் குடும்பத்திற்கே பெருத்த சனியன் பிடித்துக்கொண்டு விட்டது என்பது தாங்களறிந்த விஷயம். நமது செல்லப்பாவின் மீது வந்துள்ள கள்ளக் குற்றத்தைத் தாங்களறிவீர்கள். அது போதாதென்று உயிருக்கே உலைவைக்க எண்ணி எந்தச் சண்டாளனோ செல்லப்பா காதலித்திருந்த காந்தாமணியை நேற்றிரவு கொலை செய்துவிட்டான். அக்கொலையைச் செய்தவன் செல்லப்பாவென்று அவன்மேல் பழிவந்துவிட்டது. அதற்குத் தக்க சாக்ஷியங்கள் அடையாளங்கள் முதலியன போலீஸார் முன் ருஜூப் படுத்தப்பட்டிருக்கின்றன. போலீஸார் அவனை இன்று காலையில் போலீஸ் ஸ்டேஷனில் அடைத்திருப்பதாகச் சற்றுமுன் ஒரு ஜெவான் வந்து தெரிவித்தான். இச்செய்தியை எஜமான் கேட்டால் உடனே உயிரை விட்டுவிடுவாரே என்று எண்ணி நான் அவனையனுப்பிவிட்டு பிறகு இச்செய்தியை எஜமானிடம் கூறாமல் தங்களிடம் தெரிவித்து வேண்டிய ஏற்பாட்டைச் செய்து பின்னர் அவரிடம் தெரிவிக்கலாம் என்று வந்துவிட்டேன்.'' எனக் கூறி அங்கு கொலை விஷயமாக நடந்த சகல வரலாற்றையும் தன்னிடம் ஜெவான் கூறியவாறே நாயுடுவிடம் விஸ்தாரமாகக் கூறினான்.

N82836

# ஹாஸ்யத்துணுக்குகள்.

கோவிந்தன்:—அடி! பக்கத்து வீட்டில் என்ன விபரீதமோ தெரிய வில்லையே! ஆண் பெண்ணிருவரும் பெரிய குரல் பாய்ச்சிப் புலம்புகின்றார்களே! போய் விசாரித்துவிட்டு வருகிறேன்.—என்று கூறிக்கொண்டே பக்கத்து வீட்டுக்குச் சென்று அங்குப் புலம்பிக்கொண்டிருக்கும் இருவரையும் கண்டு "ஏனிப்படி புலம்புகின்றீர்கள்? என்ன சமாச்சாரம்? யாருக்கென்ன நேர்ந்தது?" என்று கேட்டான். இதைக் கேட்ட பக்கத்து வீட்டுப் பல்லவராயன் கோவெனக் கதறியவாறு "ஐயோ! நான் என் துயரத்தை என்னென்று கூறுவேன்? நான் கவலையின்றி நிம்மதியாக விருந்தேனே! எனக்குக் கவலை வந்து மூண்டு விட்டதே. என் வீட்டில் வெகு நாளாகப் பழகி வந்த பெருச்சாளி எனக்குக் கவலையை வைக்கக்கூடாதென்ற நோக்கத்துடன் தினம் என் வீட்டை அறுத்துக்கொண்டே இருக்கும். நான் ஓயாமல் அறுத்தவிடத்தைப் பணச் செலவிட்டுக் கட்டிக்கொண்டே வருவேன். என் கையில் பணமில்லாமல் காலியாகவே யிருக்கும். நானும் கவலையற்று இருந்தேன். அத்தகைய அதிபுத்திசாலியாகிய பெருச்சாளி இறந்து விட்டதே. இனி நான் பணத்தைச் செலவிடாமல் கையில் வைத்துக்கொண்டு இரவு பகல் தூக்கமின்றிக் கள்ளன் களவாடாமல் காவல் காக்கும் கஷ்டம் எனக்கு வந்து விட்டதே! நானென்ன செய்வேன்? ஐயோ!, பெருச்சாளி! என்னருமைப்பெருச்சாளி!" என்று ப்ரலாபித்து அழுதான். இதைக் கேட்ட அங்குக் கூடியிருந்த எல்லோரும் அவனுடைய மூடமதியைக் கண்டு நகைத்துக்கொண்டே போய்விட்டார்கள்.

* * * * *

ராமன்.—ஏனய்யா! அதோ போகிறானே அந்தப் பையனுக்கு மண்டையில் களிமண்ணைத் தான் உருட்டி வைத்திருப்பதுபோலத் தோன்றுகின்றது. இரண்டு வருடம் ஒவ்வொரு வகுப்பிலிருக்கிறான். அத்தகைய அறிவீனனுக்கு பிச்சை எடுத்தாகிலும் பணத்தைச் செலவிட்டு ஏன் படிக்க வைக்கிறார்கள்?

சுப்பன்:—இந்தத் தந்திரம் தெரியாதா? தமக்கு அவன் சம்பாதித்துத் தம்மைச் சம்ரக்ஷணை செய்யப்போகிறான் என்ற நோக்கத்துடனல்ல. விவாக காலத்தில் வரதக்ஷிணை ஆயிரம் இரண்டாயிரம் வாங்குவதற்குத் தான்.

# அமிர்தாஞ்சனம்

அமிர்தாஞ்சனம்




சர்வ நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

உடனே முந்துங்கள்.

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் டிபோ,
7. தம்புச் செட்டி வீதி, சென்னை.


Edited and Published by V. M. Parthasarathy Iyengar,
PRINTED AT THE 'NOBLE PRESS,' TRIPLICANE, MADRAS S.E.